பக்கங்கள்: 20

# தீம்புனல்

THEEMPUNAL

வாராந்தப் பத்திரிகை

தீ : 02 புனல்:40 28.01.2023 சனிக்கிழமை வள்ளுவர் ஆண்டு 2054



சென்னையில் நடைபெற்ற
புத்தகத் திருவிழா
அனுபவப் பகிர்வு

கருணாகரன்

பக்கம்
07



ஒஸ்கார்
போட்டியில்
மூன்று இந்தியப்
படங்கள்

பக்கம்
18




வர்மா

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவு பெற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடவில்லை. பங்காளிக் கட்சிகளுக்கிடையிலான பகைமையால் இந்த நிலை தோன்றியுள்ளது. தமிழ் அரசுக் கட்சியின் மூத்த அண்ணன் மனப்பான்மையை சின்னத்தம்பிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. உள்ளே புகைந்து கொண்டிருந்த அனல் வெளிப்பட்டதால் புதியதொரு கூட்டமைப்பு உருவாகி உள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தனித்தனியாகப் போட்டியிட வேண்டும் என தமிழ் அரசுக் கட்சி விரும்பியது. கூட்டமைப்பில் உள்ள புளொட்டும் ரெலோவும் அதனை விரும்பவில்லை. கூட்டமைப்பில் இருந்து வெளியேறக் காத்துக் கொண்டிருந்த அந்தக் கட்சிகள் இந்தத் துரும்பை பற்றிப் பிடித்து கூட்டமைப்பில் இருந்து வெளியேறி புதியதொரு கூட்டமைப்பை உருவாக்கி உள்ளன. தமிழ் அரசுக் கட்சியை விரும்பாத தலைவர்கள் ஒன்றாக இணைந்து புதிய கூட்டமைப்பை உருவாக்கி உள்ளனர்.

▶19



# பசியுடன் இருப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது

வானதி

விலைவாசி உயர்வு, உணவுப் பாதுகாப்பின்மை ஆகியவற்றால் பசியுடன் இருப்பவர்களின் சடுதியாக அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில் தெற்காசியாவில் 10 இல் எட்டுக்கும் மேற்பட்ட அரை பில்லியனுக்கும் அதிகமான மக்கள் ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் 1 பில்லியனுக்கும் அதிகமானோர் மிதமான மற்றும் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொண்டுள்ளனர் என்று அறிக்கை கூறுகிறது. உலகைப் பொறுத்தவரை, 2014 இல் 21% ஆக இருந்த உணவுப் பாதுகாப்பின்மை 2021 இல் 29% ஆக உயர்ந்துள்ளது.

கொவிட் - 19 தொற்றுநோய் ஒரு பெரிய பின்னடைவை ஏற்படுத்தியது, இது பெருமளவிலான வேலை இழப்புகள் மற்றும் இடையூறுகளை ஏற்படுத்தியது, மேலும் உக்ரைனில் நடந்த போர் உணவு, ஆற்றல் மற்றும் உரத்திற்கான விலைகளை உயர்த்தியுள்ளது, போதுமான உணவை பல மில்லியன் மக்களுக்கு எட்டவில்லை, அது கூறியது. FAO, UNICEF, உலக சுகாதார அமைப்பு மற்றும் உலக உணவுத் திட்டம் உள்ளிட்ட ஐ.நா ஏஜென்சிகளின் உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் பசி குறித்த ஐந்தாவது ஆண்டு கையிருப்பு அறிக்கை ஆகும்.

அந்த ஆண்டுகளில், பசி மற்றும் ஊட்டச்சத்தின்மையைப் போக்குவதற்கான முன்னேற்றம் ஸ்தம்பிதமடைந்து பின்னர் பின்வாங்கியது. 2021 இல் 9.1% ஐ.நா முகாமைகளால் அளவிடப்பட்ட ஊட்டச்சத்துக் குறைபாடு பாதிப்பு 2000 இல் 14.3% ஆக இருந்தது, ஆனால் 2020 ஐ விட சற்று அதிகமாக உள்ளது.

இத்தகைய புள்ளிவிபரங்கள் "பசிக்கு எதிரான போராட்டத்தில் மந்தநிலை தொடர்கிறது" என்று அறிக்கை கூறுகிறது, இது நகரங்களுக்குச் சென்ற மக்கள் எதிர்கொள்ளும் வளர்ந்து வரும் உணவுப் பாதுகாப்பின்மையையும் எடுத்துக்காட்டுகிறது, அங்கு அவர்களுக்கு மலிவு உணவு குறைவாகவே கிடைக்கிறது.

"சத்தான உணவை உற்பத்தி செய்வதற்கும் ஆரோக்கியமான உணவுகளுக்கு சமமான அணுகலை உறுதி செய்வதற்கும் எங்கள் விவசாய உணவு முறைகளை சீர்திருத்துவது மிகவும் முக்கியமானது" என்று அது கூறியது.

FAO இன் உணவு விலைக் குறியீடு கடந்த பல ஆண்டுகளில் உயர்ந்து, மார்ச் 2022 இல் சாதனையை எட்டியது. இந்த ஆண்டின் பிற்பகுதியில் பொருட்களின் விலைகள் சற்று குறைந்தாலும், 2020 ஆம் ஆண்டை விட 28% அதிகமாக இருப்பதால், அது மீண்டும் சரிந்தது.

ஆசிய-பசுபிக் பிராந்தியமானது ஆண்டுக்கு கிட்டத்தட்ட $2 டிரில்லியன் உணவுப் பொருட்களை இறக்குமதி செய்கிறது. அரிசி, கோதுமை, எண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் ஏழைகளை கடுமையாகப் பாதித்தது.

ஐ.நா ஏஜென்சிகள் "5F" நெருக்கடியின் ஒரு பகுதியாகும், போதுமான உணவு, தீவனம், உரம், எரிபொருள் மற்றும் நிதியுதவி இல்லாததால், கோதுமை, சமையல் எண்ணெய்கள் மற்றும் உரங்



களுக்கு பிராந்தியத்தை நம்பியிருந்த பல நாடுகளில் உக்ரைனில் ஏற்பட்ட மோதல் கடுமையான அடியை ஏற்படுத்தியுள்ளது.

ஏறக்குறைய 2 பில்லியன் மக்கள் அல்லது ஆசியாவில் வாழும் 45% மக்கள் - ஆரோக்கியமான உணவுகளை வாங்க முடியாது, இரத்த சோகை மற்றும் உடல் பருமன் மற்றும் பசி போன்ற பிரச்சினைகளுக்கு ஆளாகின்றனர்.

சுற்றுலா மற்றும் உற்பத்தித் தொழில்களில் பாதிக்கப்படக்கூடிய தொழிலாளர்களைத் தாக்கிய தொற்றுநோயின் தாக்கத்தை அடிக்கோடிட்டுக் காட்டுவது, 2019-2021 ஆம் ஆண்டில் 10 தாய்லாந்தில் ஒருவருக்கு ஊட்டச்சத்துக் குறைபாடு இருப்பதாக அறிக்கையின் தரவுகளின்படி - இது பல ஆண்டுகளுக்கு முந்தையதை விடவும் அதிக விகிதமாகும். பல தென்கிழக்கு ஆசிய நாடுகளில் சராசரி வருமானம் மிகவும் குறைவாக உள்ளது. உலக வங்கி தரவுகளின்படி, 2015-2018 க்கு இடையில் வறுமை ஏற்கெனவே 2.6% அதிகரித்துள்ளது.

"வறுமையின் அதிகரிப்பு மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாடு ஆகியவை ஒன்றாகச் செல்லும்" என்று செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்ட அறிக்கையில் ஆசிரியர் ஸ்ரீதர் தருமபுரி நிலைமையை விளக்கினார்.

ஆரோக்கியமற்ற உணவுகள் மற்றும் போதிய உணவுகள் எதிர்கால ஆரோக்கியம் மற்றும் உற்பத்தித்திறனை சமரசம் செய்கின்றன, ஏனெனில் அவை குழந்தைகளை வளர்ச்சி குன்றிய அல்லது வீணாக்குதலால் பாதிக்கப்படுகின்றன, மேலும் அவர்கள் நோய்க்கு ஆளாகின்றன. ஆசிய-பசுபிக் பகுதியில் உள்ள குழந்தைகளில் கிட்டத்தட்ட கால் பகுதியினர் வளர்ச்சி குன்றியதால் அல்லது அவர்களின் வயதுக்கு ஏற்ற சிறிய உயரத்தால் பாதிக்கப்படுவதாக அறிக்கை கூறுகிறது.

அறிக்கையிலிருந்து வேறு சில விபரங்கள்:

ஆப்கானிஸ்தானில், 70% மக்கள் மிதமான அல்லது கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொள்கின்றனர், ஏனெனில் ஆகஸ்ட் 2021 இல் தலிபான்கள் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் பொருளாதாரம் சரிந்தது, வெளிநாட்டு உதவி கிட்டத்தட்ட ஒரே இரவில் நிறுத்தப்பட்டதால் மில்லியன் கணக்கானவர்களை வறுமை மற்றும் பட்டினியில் தள்ளியது.

கம்போடியாவில், பாதி மக்கள் மிதமான அல்லது கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொள்கிறார்கள்.

ஆசியாவில் 15-49 வயதுடைய பெண்களில் மூன்றில் ஒரு பகுதியினர் இரத்த சோகையால் பாதிக்கப்பட்டுள்ளனர், இது சோர்வை ஏற்படுத்துகிறது மற்றும் அதன் மிகக் கடுமையான வடிவங்களில் நுரையீரல் மற்றும் இதய பாதிப்பை ஏற்படுத்தும். ■

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"

கனகசபை கட்டடத் தொகுதி.
பருத்தித்துறை வீதி. நெல்லியடி.
தொ.பே.: 0777 133 542
www.theempunal.com
news@theempunal.com

தீம்புனல் THEEMPUNAL

# வெற்றிக் கனவில் மிதக்கும் வேட்பாளர்கள்

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுபவர்கள் வெற்றி பெற்றுவிட்டதாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அநேகமான இடங்களில் வேட்பாளர் தெரிவின் வறட்சி வெளிப்படுகிறது. அவசர அவசரமாக சில வேட்பாளர்கள் இறக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்க் கட்சித் தலைவர்கள் மற்றைய தலைவர்கள் மீது குற்றப் பத்திரம் தாக்கல் செய்வதிலேயே குறியாக இருந்தனர். ஆகையால் திடுதிப்பென தேர்தல் அறிவிக்கப்பட்டதும் வேட்பாளர்களைத் தேடி அலைந்தனர். ஊர்ப்பக்கம் திரும்பிப் பார்க்காத தலைவர்கள் சில ஊர்களுக்குச் சென்று அங்குள்ள பிரபலங்களைத் தம் பக்கம் இழுக்க முயற்சித்தனர். பலர் நாசூக்காக மறுப்புத் தெரிவித்தனர். மிக முக்கியமாக பெண் வேட்பாளர்களைத் தேடினார்கள். கிடைத்த வேட்பாளர்களுடன் பட்டியலைப் பூர்த்தி செய்தார்கள்.

ஒரு குடும்பத்தில் உள்ளவர்கள் பல கட்சிகளில் போட்டியிடுகிறார்கள். இதனால் வாக்குகள் பிரிந்து ஊருக்குத் தேவை இல்லாத ஒருவர் வெற்றி பெறும் சந்தர்ப்பம் ஏற்பட வாய்ப்புள்ளது.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது கொழும்பில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தொழிலதிபர் ஒருவர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இரண்டு வருடங்கள் அவருக்கு தவிசாளர் பதவி வழங்குவதென கனவான் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இரண்டு வருடங்கள் முடிந்த பின்னர் அந்தக் கனவான் பதவி விலக மறுத்துவிட்டார். கட்சித் தலைமை விசாரணை செய்தும் அவரை அகற்ற முடியவில்லை. இந்தத் தேர்தலில் அவர் கட்சி தாவி போட்டியிடுகிறார். கடந்த முறை தவிசாளர் பதவிக்காக தவமாய் தவமிருந்தவரும் வெறுப்புற்று வேறு கட்சியில் இணைந்து தேர்தலைச் சந்திக்கிறார்.

ஒரு வட்டாரத்தில் அதிக பட்சமாக 1000, 1200 வாக்குகள் இருக்கும் அந்த வட்டாரத்தில் செல்வாக்கு மிக்கவர்கள் பல கட்சிகளில் போட்டியிடுவதால் வாக்குகள் சிதறடிக்கப்படும் நிலை தோன்றியுள்ளது.

இலங்கை பொருளாதார ரீதியில் பல்வேறு சவால்களை எதிர்நோக்கியுள்ள இந்தத் தருணத்தில், சவாலுக்கு மத்தியில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி, எதிர்வரும் மார்ச் மாதம் 9 ஆம் திகதி உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தலை நடத்தாதிருப்பதற்கு அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக எதிர்கட்சிகள் குற்றம்சுமத்தி வருகின்ற சூழலில், தேர்தலுக்கு தயாராகுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சிக்கு அறிவித்துள்ளார். தேர்தலை நடத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி, தமது கட்சி உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

24 மாநகர சபைகள், 41 நகர சபைகள் மற்றும் 276 பிரதேச சபைகளுக்கு 8,327 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தலை, இம்மாத இறுதி வாரத்தில் தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிடவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் எஸ்.ஜி.புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

வேட்புமனுத் தாக்கல் முடிந்து ஐந்து வாரங்கள் முதல் ஏழு வாரங்கள் வரை உள்ளூராட்சித் தேர்தலை நடத்த வேண்டுமென்ற அடிப்படையில் இந்தக் காலம் குறிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில், உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்கும் அரசாங்கத்தின் இரகசிய முயற்சிகள் பற்றிய ஊகங்களை நிராகரித்த எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் லக்ஷ்மன் கிரியெல்ல, தேர்தலை ஒத்திவைக்கும் அதிகாரம் நிறைவேற்று ஜனாதிபதிக்குக்கூட இல்லையென்று கூறினார். தேர்தல் ஆணைக்குழுவினால் நிறைவுறுத்தப்பட்ட 2022 வாக்காளர் பதிவேடு, எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பயன்படுத்தப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நான்கு வருடப் பதவிக்காக அரசியலின் அடிப்படை அறிவு இல்லாத சிலரும் தேர்தலில் போட்டியிடுகிறார்கள். தேர்தல் முடிந்ததும் கட்சி மாறும் காட்சிகள் அரங்கேறும் என எதிர்பார்க்கலாம். ■



# இலங்கையைப் பாராட்டிய ஐ.எம்.எப் நிறைவேற்று இயக்குநர்

சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியன், பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் வகையில் சீர்திருத்தங்களை விரைவுபடுத்துவதற்கும் கடினமான வரி அதிகரிப்பை அமுல்படுத்துவதற்கும் இலங்கைத் தலைமை வெளிப்படுத்தியுள்ள அரசியல் மிகவும் பாராட்டத்தக்கது என தெரிவித்துள்ளார்.

பிரதமர் தினேஷ் குணவர்தனவைச் சந்தித்த கலாநிதி சுப்ரமணியன், இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் நிவாரணப் பொதிக்கான அனைத்துத் தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் முக்கிய கடன் வழங்கும் நாடுகளின் இறுதி உத்தரவாதங்கள் நிறைவடைந்த தருணத்தில், செயல்முறை இறுதி செய்யப்படும் என்றும் கூறினார்.

"நாங்கள் உங்களுக்காக பேட்டிங் செய்வோம்" என்று IMF நிர்வாக இயக்குநர் கிரிக்கெட் வாசகங்களைப் பயன்படுத்திக் கூறினார். 2018 முதல் 2021 வரை இந்திய அரசின் தலைமைப் பொருளாதார ஆலோசகராக இருந்த டாக்டர் சுப்ரமணியன் கூறுகையில், நாங்கள் உங்களுக்காக நேராக டிரைவ் மூலம் முன்னோக்கி விளையாடுகிறோம், தேவைப்படும் போதெல்லாம், நாங்கள் கவர் டிரைவ்களையும் விளையாடுகிறோம்.

நாடு எதிர்கொள்ளும் முன்னோடியில்லாத பொருளாதார சவால்களை எதிர்கொள்வதற்கும் உள்ளூர் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் ஏற்றுமதிக்கும் விவசாய உற்பத்திகளை மேம்படுத்துவதற்கும் அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் குறித்து IMF பிரதிநிதிகளுக்கு பிரதமர் விளக்கினார்.

அத்தியாவசியமற்ற இறக்குமதிகளைக் குறைப்பதற்கும் ஏற்றுமதி உற்பத்திகளை அதிகரிப்பதற்கும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விரிவாகக் கூறிய அவர், சமூகத்தின் ஏழ்மையான பிரிவினருக்கான நலன்களின் அவசியத்தை வலியுறுத்தினார். டாக்டர் சுப்ரமணியன் கூறுகையில், பிரதமர் சுட்டிக்காட்டியபடி, கடன்களை மறுசீரமைக்கவும் பொருளாதாரத்தை மீட்டெடுக்கவும் திட்டங்கள் வகுக்கும் போது, பொருளாதார ரீதியாக பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கு ஒரு பாதுகாப்பு வலை அவசியம்.

எவ்வாறாயினும், பொதுத்துறையினர் தியாகங்களைச் செய்ய தயாராக இருக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார், ஏனெனில் அவர்கள் குறைந்தபட்சம் சம்பளம் உறுதி செய்யப்படுகிறார்கள், பலர் தங்கள் வருமான வழிகளை இழந்துள்ளனர்.

பிரதமரின் செயலாளர் அநுர திஸாநாயக்க, மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் கலாநிதி சந்திரநாத் அமரசேகர, சர்வதேச நாணய நிதியத்தின் மாற்று நிறைவேற்றுப் பணிப்பாளர், பணிப்பாளர் கலாநிதி பி.கே.ஜி. ஹரிச்சந்திர, மத்திய வங்கியின் பொருளாதார ஆய்வுத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் கலாநிதி வி.டி. விக்கிரமாராச்சி ஆகியோரும் கலந்துரையாடலில் பங்குபற்றினர். ■

# மதில்மேல் பூனையாக வீற்றிருக்கின்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்

பி.மாணிக்கவாசகம்

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, வாக்களிப்புக்கான திகதியும் ஊடகத் தகவலாக அறிவிக்கப்பட்டுவிட்டிருக்கின்றது. ஆனால், தேர்தல் நடைபெறுமா? இல்லையா? என்பது குறித்து திடமான நம்பிக்கைக்குரிய நிலைமையை அரசியலில் காண முடியவில்லை. அநேகமாக தேர்தல் ஒத்திவைக்கப்படலாம் என்ற நிலைமையே மேலோங்கி இருக்கின்றது.

இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பில் பல்வேறு இழுபறிகளுக்கு மத்தியிலேயே தேர்தல் நடத்தப்படும் என்று தேர்தல் ஆணையகம் கூறியது. முன்னதாக தேர்தலை நடத்தலாமா அல்லது நடத்தாமல் விடலாமா என்ற பட்டிமன்ற நிலைமைகூட அரசியல் அரங்கத்தில் தோற்றம் பெற்றிருந்தது. உறுதியற்ற அரசியல் நிலைமையும் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக நியமனம் பெற்றதையடுத்து ஏற்பட்ட அரசியல் மாற்றங்களும் இந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதா? இல்லையா? என்ற வாதப் பிரதிவாதங்களில் செல்வாக்கு செலுத்தியிருந்தன. எனினும் அரசியல் ரீதியான பிடுங்குப்பாடுகளுக்கு மத்தியில் தேர்தல் ஆணைக்குழு தேர்தல் தொடர்பான அறிவித்தலை விடுத்தது. வேட்பு மனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகளின் முதல் அம்சமாகிய கட்டுப்பணம் வெலுத்துவதில் ஓர் இழுபறி நிலைமை உருவாகியது. வேட்பு மனுக்களுக்கான கட்டணம் செலுத்துவது தொடர்பான அறிவித்தலை தேர்தல் ஆணைக்குழு விடுத்திருந்த நிலையில் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகளாகிய மாவட்டச் செயலாளர்களுக்கு வேட்பு மனுவுக்கான கட்டுப்பணத்தை ஏற்றுக்கொள்வதை மறு அறிவித்தல் வரை நிறுத்தி வைக்குமாறு சுற்றறிக்கை ஒன்றின் மூலம் பணிப்புரை விடுத்திருந்தார்.

இதனால் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களிடம் இருந்து கட்டுப்பணத்தை ஏற்கத் தொடங்கியிருந்த தெரிவத்தாட்சி அதிகாரிகள் ஓர் இக்கட்டான நிலைமைக்கு ஆளாகினர். தெரிவத்தாட்சி என்ற ரீதியில் தேர்தல் ஆணைக்குழுவின் உத்தரவுக்கமைய கட்டுப்பணத்தை ஏற்பதா? அல்லது மாவட்டச் செயலாளர் என்ற வகையில் பொதுநிர்வாக அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கை பணிப்புரையை ஏற்று கட்டுப்பணத்தை ஏற்காமல் விடுவதா என்ற குழப்பநிலைமைக்கு அவர்கள் ஆளாகினார்கள்.



அரசியல் கட்சிகளும் ஜனநாயகச் செயற்பாட்டாளர்களும் தேர்தல் விடயங்களில் தலையீடு செய்த பொதுநிர்வாக அமைச்சுச் செயலாளரின் செய்கையைக் கண்டித்து குரல் எழுப்பினார்கள். தேர்தல் ஆணைக்குழுவும் தேர்தல் விடயங்களில் தலையீடு செய்வதற்குப் பொதுநிர்வாக அமைச்சின் செயலாளருக்கு அதிகாரம் கிடையாது என அதிகாரபூர்வமாக மறுத்துரைத்ததையடுத்து, செயலாளர் தனது சுற்றறிக்கையை மீளப் பெற்றுக் கொண்டார்.




இருப்பினும் தேர்தல் பற்றிய விடயங்களில் அரசியலமைப்பு ரீதியாக சுதந்திரமாகச் செயற்படுகின்ற ஆணையைப் பெற்றுள்ள தேர்தல் ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கு இடையூறாகச் செயற்பட்டமைக்காக பொது நிர்வாக அமைச்சுச் செயலாளர் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற குரல்களும் எழுந்தன. இருப்பினும் அமைச்சரவையின் முடிவுக்கு அமைவாகவே கட்டுப்பணம் ஏற்பதை நிறுத்துமாறு சுற்றறிக்கை வெளியிட்டதாக பொதுநிர்வாக அமைச்சுச் செயலாளர் தனது செயற்பாட்டிற்கு நியாயம் கற்பித்திருந்தார்.

ஆக, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விடயத்தில் அமைச்சரவையின் ஊடாக அரசாங்கமே அத்துமீறிய நிலையில் தலையீடு செய்திருந்தது என்பது பொதுநிர்வாக அமைச்சுச் செயலாளரின் தன்னிலை விளக்கத்தின் ஊடாக வெளிப்பட்டிருந்தது. இதனால் தேர்தல்களை உரிய காலத்தில் நடத்த வேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ள தேர்தல் ஆணைக்குழு தனது கடமையை சுதந்திரமாகச் செய்வதை அரசு, அரசியல் காரணங்களுக்காகத் தடுக்க முற்பட்டிருந்ததாக எதிர்க்கட்சிகள் பகிரங்கமாகவே குற்றம் சுமத்தி இருக்கின்றன. இந்த நிகழ்வுக்குப் பின்னரும்கூட அரசு பல்வேறு வழிகளில் தேர்தல் நடத்துவதைத் தடுப்பதற்கான மறைநிலை முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாக எதிர்க்கட்சியினர் தொடர்ச்சியாகக் குற்றம் சாட்டி வருகின்றனர்.




இத்தகைய குற்றச்சாட்டுகளுக்கு மத்தியிலேயே தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்டு மார்ச் 9 ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருக்கின்றது. ஆனால், இந்த அறிவித்தல் அதிகாரபூர்வமானது என்பதற்கான அடையாளமாக வர்த்தமானியின் மூலம் அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும். வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படாமை தேர்தல் தொடர்பில் ஏற்பட்டுள்ள இரண்டாவது இழுபறியாகக் கருதப்படுகின்றது. தேர்தலுக்கு எதிரான அரசாங்கத்தின் அழுத்தமே வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படாமைக்கான முக்கிய காரணம் எனக் கூறப்படுகின்றது.

தேர்தலுக்கான அறிவித்தல் வெளியிட்ட பின்னரும்கூட அரச தரப்பினர் தேர்தல் நடத்தப்படக் கூடாது எனக் கூறி வருகின்றனர். நலிந்துள்ள நாட்டின் பொருளாதார நிலைமை இந்தத் தேர்தலுக்கு மிகப் பெரிய சவாலாக அமைந்திருக்கின்றது என்று அரசாங்கம் தேர்தல் ஆணைக்குழுவுக்கும் அதே போன்று நீதிமன்றத்திற்கும் கூட அறிவித்திருக்கின்றது. ஆனால், தேர்தல் தொடர்பில் அமைச்சரவையில் விவாதிக்கப்படவில்லை என அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கின்ற வாராந்த ஊடகவியலாளர்கள் சந்திப்பில் அமைச்சர் பந்துல குணவர்தன கூறியுள்ளார்.

'தேர்தலைப் பின்போடுவது குறித்து அரசு இன்னும் தீர்மானிக்கவில்லை' என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொது வைபவம் ஒன்றில் தெரிவித்துள்ள கருத்து, அமைச்சர் பந்துல குணவர்தனவில் கூற்றை உறுதிப்படுத்தும் வகையில், அமைந்துள்ளது. ஆனால், தேர்தலில் தாங்கள் வெற்றி பெறமுடியாது என்ற காரணத்திற்காகவும் தோல்வி அச்சத்தினாலுமே அரசாங்கம் தேர்தலை நடத்தவிடாமல் தடுக்க முற்படுவதாக எதிர்க்கட்சியினர் சுட்டிக்காட்டியிருக்கின்றனர்.

நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதாரச் சிக்கல் நிலைமையில் தேர்தல் செலவுக்குத் தேவையான 10 பில்லியன் ரூபாவைத் திரட்ட முடியாது என்று அரசாங்கம் கூறுவதைப் பொய்யான கூற்று என்று பிரதான எதிர்க்கட்சியாகிய ஐக்கிய மக்கள் சக்தி சாடியிருக்கின்றது. நடப்பாண்டாகிய 2023 ஆம் ஆண்டுக்கு உரிய, தேர்தல்கள் உள்ளிட்ட அரச செலவீனங்களுக்கென வரவு செலவுத் திட்டத்தில் 7 ஆயிரத்து 900 பில்லியன் ரூபா ஏற்கெனவே ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இதில் உள்ளூராட்சித் தேர்தல் செலவுக்காக 0.13 சதவீதமே தேவைப்படுகின்றது. இந்த நிலையில் தேர்தல் செலவுக்கென அரசிடம் பணமில்லை என்ற பொய்யான காரணத்தை எந்த நிலையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரட்ன கூறியுள்ளார்.

தேர்தல் செலவுக்கான நிதி கைவசம் இல்லை என்ற அரசின் கூற்று ஒரு புறமிருக்க, தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்காக ஆயிரக்கணக்கான வேட்பாளர்கள் பல இடங்களுக்கும் செல்வதற்காக அதிகளவு எரிபொருள் தேவைப்படும் என்றும் இந்த எரிபொருளின் திடீர் அதிகரிப்பானது, எரிபொருளுக்கான வரிசைகளை மீண்டும் உருவாக்கிவிடும் என்ற அச்சமும் வெளியிடப்பட்டிருக்கின்றது. இந்த எரிபொருள் அதிகரிப்பு விடயத்தை சாதாரணமாகக் கருதிவிட முடியாது. சாதாரணமாகக் கருதி புறந்தள்ளிவிடவும் முடியாது.

கியு ஆர் நடைமுறையின் மூலம் மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருள் விநியோகத்தினால் தேவையான அளவு எரிபொருளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமையில் தேர்தல் செயற்பாடுகளில் பேரூந்துகளை ஈடுபடுத்துவதில் சிக்கல்கள் இருப்பதால் இலங்கை போக்குவரத்துச்சபை தயக்கம் காட்டியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதேபோன்று தேர்தல் நடவடிக்கைகளினால் அதிகரிக்கின்ற மின்சாரத்தைத் தடையின்றி விநியோகிக்க முடியாத நிலைமை இலங்கை மின்சார சபைக்கு ஏற்பட்டிருப்பதாகவும் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இதனையும்விட, நாட்டில் உள்ள 340 க்கும் மேற்பட்ட உள்ளூராட்சி சபைகளில் அங்கம் வகிக்கவுள்ள 8 ஆயிரத்து 719 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காகப் பல்லாயிரக்கணக்கான வேட்பாளர்கள் களத்தில் இறங்கியுள்ளனர். இவர்களும் இவர்களது ஆதரவாளர்களும் தேர்தல் பிரச்சாரத்துக்காக மேற்கொள்கின்ற பிரயாணத்தினால் நாடளாவிய ரீதியில் எரிபொருள் நுகர்வின் அளவு பன்மடங்காக அதிகரிக்கவே செய்யும். இவ்வாறு தேர்தலையொட்டி திடீரென அதிகரிக்கவுள்ள எரிபொருள் தேவையை எதிர்கொள்வதற்கு எரிபொருள் துறையும் அரசும் தயார் நிலையில் இருப்பதாகத் தெரியவில்லை. இது தேர்தல் பிரச்சாரக் காலத்தில் எரிபொருள் விநியோகத்தில் மிகுந்த சவால் நிறைந்த நிலைமையை உருவாக்கிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

தற்போது நடைமுறையில் உள்ள 2 மணித்தியாலம் 20 நிமிட நேர மின்வெட்டை 3 மணித்தியாலங்களாக அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக மின்விநியோகத்துறையினர் தரப்பில் இருந்து தகவல் வெளியிடப்பட்டிருக்கின்றது. இந்த நிலையில் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கும் தேர்தல் நடவடிக்கைகளுக்கும் மேலதிகமாகத் தேவைப்படுகின்ற மின்சாரத்தை எவ்வாறு மின்சார சபை விநியோகிக்கப் போகின்றது என்பதும் கேள்விக்குறியாக உள்ளது.

(19 ஆம் பக்கம் பார்க்க...)

# அரசியல்வாதிகளைப் பார்த்து மக்கள் கேள்வி கேட்கவேண்டிய நேரம் வந்துள்ளது!

அவதானி



இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்து 75 வருடங்களாகப் போகின்றது. இந்த ஏழு தசாப்த காலத்திற்குள் எத்தனை தேர்தல்களை, எத்தனை அரசியல் தலைவர்களை, அரசியலை வைத்து பிழைப்பு நடத்துபவர்களை மக்கள் பார்த்துவிட்டார்கள்.!?

முன்னர் ஒன்றாக இருந்த தலைவர்கள், பின்னர் பிளவுண்டு புதிய புதிய அரசியல் கட்சிகளை உருவாக்கினார்கள். இந்தப் பிளவுகளையும் பிணக்குகளையும் இலங்கை சுதந்திரம் பெற்ற நாள் முதலாக மக்கள் பார்த்து வருகின்றனர்.

பாராளுமன்றத் தேர்தல், இடைத்தேர்தல், ஜனாதிபதித் தேர்தல், மாகாண சபைத் தேர்தல், பிரதேச சபைத் தேர்தல், உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் என மக்கள் காலம் காலமாக கடந்த 75 வருடகாலமாக பலதரப்பட்ட தேர்தல்களைப் பார்த்து வருகின்றனர்.

ஒருவகையில் இவை உற்சவங்களாகிவிட்டன. மீண்டும் எதிர்வரும் மார்ச் மாதம் நாட்டில் மற்றும் ஒரு குட்டித் தேர்தல், உள்ளூராட்சி மன்றங்களின் பெயரில் நடக்கவிருக்கிறது.

பல கட்சிகளும் சுயேட்சைக்குழுக்களும் கட்டுப்பணம் செலுத்தும் காட்சிகள் அரங்கேறி வருகின்றன. இனி, தேர்தலில் போட்டியிடும் கட்சிகளின் தலைவர்களும் பேச்சாளர்களும் மக்களிடம் வாக்குப் பிச்சை கேட்டு வருவார்கள். அத்துடன் சந்திக்குச் சந்தி மேடைகள் அமைத்து ஒலிவாங்கியை பிடித்துக்கொண்டு முழங்கத் தொடங்குவார்கள். ஊடகங்களில் விளம்பரம் செய்வார்கள்.

பேசும் அரசியல்வாதிகளின் உரைகள் பதிவாகும் ஹன்சார்ட்டை மக்கள் பார்ப்பதில்லை. மக்களால் பாராளுமன்றம் அனுப்பப்பட்ட அரசியல்வாதிகள் அங்கே என்ன பேசுகிறார்கள்...? எவ்வாறு நடந்துகொள்கிறார்கள்? என்பதை ஊடகங்களிலிருந்துதான் மக்கள் அறிந்துகொள்கிறார்கள்.

கடந்த 2019 ஆம் ஆண்டு நடந்த ஈஸ்டர் குண்டுத் தாக்குதலில் நேரடியாக சம்பந்தப்பட்டவர்கள் எவரும் இன்னமும் நீதியின் முன்பாக நிறுத்தப்படவில்லை. ஆண்டுகள் நான்காகப்போகிறது. எனினும் ஒரு முக்கிய செய்தி நீதிமன்றத்திலிருந்து வந்துள்ளது.

கலைஞர் வீதியில் இறங்கி மக்களிடம் பணம் கேட்டு பிச்சை எடுக்கிறார்.

தேர்தலில் வாங்கிய வாக்கையும் வீதியில் பெற்ற பிச்சையையும் மீண்டும் திருப்பிக்கொடுக்க முடியாது !

ஒரு முன்னாள் ஜனாதிபதி காலத்தில், அவரது கவனயீனத்தினால் நடந்த படுபாதகச்செயலுக்கு தண்டப்பணம் நூறு கோடி ரூபா. கொல்லப்பட்டது அப்பாவி பொதுமக்கள். அதிலும் சிலுவையில் அறையப்பட்ட யேசுபிரானை வணங்கச் சென்றவிடத்தில் நடந்த அனர்த்தம். மூன்றரை ஆண்டுகள் கடந்த பின்னர், இப்போதுதான் இப்படி ஒரு தீர்ப்பு வந்திருக்கிறது.

சரி... போகட்டும். இது குறித்து பாராளுமன்றத்தில் பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகாவும் மைத்திரிபால சிறிசேனவும் வாய்ப்பேச்சில் மோதிக்கொண்டபோது உதிர்த்த வார்த்தைகள் எத்தகையது என்பதைப் பாருங்கள்.

புறக்கோட்டையில் மைத்திரிக்காக பிச்சை எடுத்தவர் ஒரு சிங்கள கலைஞர். ஆனால், மைத்திரிதான் அங்கே பிச்சை எடுக்கிறார் எனச்சொல்கிறார் பீல்ட் மார்ஷல்.

அதற்கு எதிர்வினையாற்றும் மைத்திரி, தன்னை விமர்சிக்கும் பீல்ட்மார்ஷல் முன்னர் மஹிந்த காலத்தில் சிறையிலிருந்தபோது, அவரை பொதுமன்னிப்பில் விடுவித்து, இழந்துபோன பட்டத்தையும் தான்தான் கொடுத்ததாகவும் தன்னை விமர்சிக்கும் தகுதி அவருக்கு இல்லையென்றும் முன்னர் இவரும் குண்டுத்தாக்குதலில் குடல் வெளியே வந்து சிகிச்சை பெற்றவர் எனவும் தன்னை விமர்சித்து வரும் சந்திரிக்காவும் ஒரு குண்டுத் தாக்குதலில் கண்ணை இழந்ததாகவும் சொல்கிறார்.

2019 இல் தேவாலயத்திற்கு பிரார்த்தனைக்கு சென்றவர்கள் திரும்பி வரவில்லை. அவர்களில் பலர் கண்களையும் உடல் உறுப்புகளையும் இழந்தனர்.

அவர்களின் உறவுகளுக்கு நீதி கிடைப்பதற்கு பாடுபடாத இந்த அரசியல்வாதிகள், தங்களுக்குள் பிடுங்குப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

தனது அரசியல் எதிரிகளுக்கு குடல் போனதையும் கண் போனதையும் பற்றி பேசும் மைத்திரியார், அன்று தேவாலயங்களில் உயிரை இழந்த மக்களுக்கு மீண்டும் உயிரைத்தான் தரமுடியாது, ஏன் அவ்வாறு நடந்தது என்பதைக் கண்டறிவதற்காகவாவது இந்தப் பாராளுமன்ற அரசியல்வாதிகள் இதுவரையில் ஆக்கபூர்வமாக என்ன நடவடிக்கை எடுத்தார்கள்...?

சம்பவம் நடந்த காலத்தில் ஜனாதிபதியாகவிருந்த மைத்திரிபால சிறிசேன, நூறு மில்லியன் ரூபா தண்டப்பணம் செலுத்தவேண்டுமாம். அவரால் அந்த உத்தரவை எதிர்த்து மேன்முறையீடும் செய்ய முடியாதவகையில் தீர்ப்பு வந்திருப்பதனால், அந்தப்பணத்தை சேகரிக்க தனக்கு மக்கள்தான் உதவவேண்டும் என அவர் சொல்லியிருக் கிறார்.

அவரது வேண்டுகோளை அவதானித்த சிங்கள கலைஞரான சுதத்த திலகசிறி என்பவர், புறக்கோட்டை பஸ்நிலையத்தில் உண்டியல் குலுக்கி பணம் சேர்த்துள்ளார்.

அவ்வாறு சேர்த்த பணத்தை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேரில் சென்று கையளித்துமுள்ளார்.

முன்னைய ஜனாதிபதித் தேர்தலிலும், கடந்த பாராளுமன்றத் தேர்தலின் போதும் இதே மைத்திரி நாட்டு மக்களிடமும் தனது தொகுதி மக்களிடம் வாக்குப் பிச்சை கேட்டார். இப்போது அவருக்காக ஒரு

வாக்குச்சாவடிக்கு நடந்து வரமுடியாத நோயாளர்களையும் வாகனத்தில் தூக்கி வந்து புல்லடி போடச்செய்வார்கள். இவ்வளவு காட்சிகளும் மீண்டும் நாட்டில் அரங்கேறப் போகின்றன.

ஆனால், மக்கள் தேர்தல் காலத்தில் மாத்திரம் தம்மைத்தேடி வரும் வேட்பாளர்களிடம் ஏதும் கேள்விகள் கேட்பார்களா..?

எமக்குரிய இந்தத் தேவைகளை செய்து தந்தால்தான் வாக்களிப்போம் என மக்கள் அவர்களிடம் சொல்வார்களா...? அதற்காகவாவது வாய் திறந்து மக்கள் பேசுவார்களா...? அல்லது வாங்க மச்சான் வாங்க, வந்த வழியைப் பார்த்து போங்க - எனப் பாடுவார்களா...?

இதுவரையில் கேட்காதிருந்த மக்கள், இனியாவது கேட்கவேண்டிய காலம் வரவேண்டும். மக்களால் தெரிவாகி பாராளுமன்றம், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்களுக்கு இதுவரையில் சென்றவர்களின் வருடாந்த சொத்து மதிப்பு எவ்வளவு? என்றாவது வாக்காளர்கள் தம்மைத் தேடிவரும் அரசியல்வாதிகளிடம் இதுவரையில் கேட்டிருக்கிறார்களா..?

இலங்கை ஜனநாயக நாடு. பேச்சுரிமையுள்ள நாடு. வாக்களிக்கும் மக்களுக்கு கேள்வி கேட்கும் உரிமையும் இருக்கிறது.

பாராளுமன்றத்தில்



வரவிருக்கும் தேர்தல் காலத்தில் மக்கள் இவர்களிடம் கேட்கவேண்டிய கேள்விகள் அநேகம் இருக்கின்றன. ■

**ஈழத்தமிழர் விவகாரத்தில் இந்தியா இனிமேல் தலையிடாது, அழுத்தம் கொடுக்காது என்பதை மேலும் சில மாதங்கள் காத்திருந்து நன்கு உறுதிப்படுத்திய பின்னர், இலங்கையில் இந்தியாவுக்கான ஆதரவுத் தளத்தையும் சிங்கள ஆட்சியாளர்கள் புறம்தள்ளும் காலம் இல்லாமலில்லை.**

# டில்லி கொழும்பைக் கையாளுகின்றதா? கொழும்பு டில்லியை ஏமாற்றுகின்றதா?

அ.நிக்ஸன்

தமிழ்த்தேசியக் கட்சிகளிடையே தொடர்ச்சியாகக் காணப்படும் முரண்பாடுகள், பிரிந்து நின்று அமெரிக்க-இந்திய அரசுகளின் தந்திரோபாயங்களுக்கு உட்படுதல் மற்றும் கொழும்பில் சிங்கள ஆட்சியாளர்களுடனான தனிப்பட்ட உறவுகள் போன்ற நேர்மையற்ற அரசியல் செயற்பாடுகளை இந்திய - இலங்கை அரசுகள் கனகச்சிதமாகக் கையாண்டு வருகின்றன.

இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரின் கொழும்புப் பயணம் அதனை உறுதிப்படுத்தியுள்ளது. பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை ரத்துச் செய்ய வேண்டும் என்ற கடும் நிலைப்பாட்டுடன் இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவராகப் புதுடில்லியில் பதவி வகிக்கும் மிலிந்த மொறகொட அதற்குரிய அரசியல் வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் நிலையில், பதின்மூன்றை நடைமுறைப்படுத்துமாறு ஜெய்சங்கர் பரிந்துரைத்திருப்பது வேடிக்கை.

பதின்மூன்று என்பது தற்போது இந்திய - இலங்கை அரசுகளுக்கு உதைப்பந்தாட்ட விளையாட்டாக மாறிவிட்டது.

ரஷ்ய - உக்ரைன் போர்ச் சூழலில் எழுந்துள்ள புவிசார் அரசியல் - பொருளாதாரப் போட்டிகளுக்கு மத்தியில், தன்னை மிகப் பெரிய சக்தியாகக் காண்பிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்ட இந்தியா, இந்தோ - பசுபிக் விகாரத்தில் இலங்கையைத் தனது கூட்டாளியாக வைத்திருக்க வேண்டுமென்றால். சிங்கள ஆட்சியாளர்களின் அரசியல் விருப்பங்களை நிறைவேற்ற வேண்டிய கட்டாயம் உண்டு.

இலங்கைக்கும் இது தெரிந்த பின்னணியில் தான், இந்தியாவைத் தங்கள் பக்கம் இறங்கி வர வைக்கும் அரசியல் நுட்பங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகநுட்பமாகக் கையாண்டு வருகின்றார். இந்த நகர்வு ஏறத்தாழ கடந்த மூன்று மாதங்களாகச் சூடு பிடித்திருந்த நிலையில், ரணிலின் குறிப்பாக இலங்கையின் சில விருப்பங்களுக்கு இந்தியா உடன்பட்டிருக்கின்றது. கடந்த நவம்பரில் இலங்கையில் இந்தியாவுக்கான முக்கியத்துவத்தை ரணில் வழங்கியிருந்தார்.

இந்த இடத்தில் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமென அமைச்சர் ஜெய்சங்கர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடுமையாக அழுத்தியதாக இந்திய ஆங்கில ஊடகங்கள் மார் தட்டுகின்றன. இலங்கையை அடிபணிய வைத்தார் ஜெய்சங்கர் என்று ஒன்இந்தியா (oneindia) என்ற செய்தி இணையத்தளத்தில் வர்ணித்துள்ளது.

ஆனால், இலங்கைக்குத் தேவையான அத்தனை உதவிகளையும் செய்வதற்கு இந்தியா இணங்கியுள்ளதாகவும் இலங்கையின் பல கோரிக்கைகளுக்கு இந்தியா விட்டுக் கொடுத்துச் சாதகமான பதில் வழங்கியிருப்பதாகவும் கொழும்பில் சிங்கள ஆங்கில ஊடகங்கள் கூறுகின்றன.

டெயிலிமிரர் நாளிதழ், ரணில் விக்கிரமசிங்கவின் சிறந்த உத்தியால் இலங்கைக்கு உதவி வழங்க இந்தியா ஒப்புக் கொண்டிருப்பதாக விபரித்துள்ளது. இலங்கையின் இராஜ தந்திரத்துக்குக் கிடைத்த வெற்றி என்ற தொனியில் அததெரன (adaderana) என்ற செய்தித் தளம், ஜெய்சங்கரின் கொழும்பு வருகையை விமர்சிக்கிறது.

இந்தியாவைப் பொறுத்தவரை இலங்கையில் தமக்குரிய தேவைகளை இலங்கை வழங்கினால் போதும் என்ற நிலையிலும் ஈழத்தமிழர் விவகாரத்தை இலங்கை குறிப்பாக சிங்கள ஆட்சியாளர்கள் தமது விருப்பங்களுக்கு ஏற்ப கையாளட்டும் என்ற போக்குமே விஞ்சிக் காணப்படுகின்றன.

இலங்கையைப் பொறுத்தவரை ஈழத்தமிழர் விவகாரத்தில் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துங்கள் என்று சொல்லளவில் மாத்திரம் இந்தியா நின்றால் போதும் என்ற மனநிலையே மேலோங்கியுள்ளது.



ஆகவே, இந்தியாவின் தேவைக்கு இலங்கையும் ஈழத்தமிழர் விவகாரத்தில் இந்தியாவும் விட்டுக் கொடுத்துச் செயற்படுதல் என்ற பரஸ்பர அரசியல் அணுகுமுறை வெற்றியளித்திருக்கின்றது என்பதையே ஜெய்சங்கரின் கொழும்புப் பயணம் இம்முறை பகிரங்கப்படுத்தியிருக்கிறது.

ரணில் விக்கிரமசிங்கவும் ஜெய்சங்கரும் உத்தியோகபூர்வமாகச் சந்தித்து உரையாடியபோது, இரு நாடுகளுக்குமிடையிலான அரசியல், பொருளாதார, சமூக விவகாரங்கள் மற்றும் முதலீட்டு விடயங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டிருப்பதாக அததெரன என்ற ஆங்கில இணையத்தளம் கூறுகின்றது.

குறிப்பாக, சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடனைப் பெற இந்தியா முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்ற தொனியில் ரணில் நேரடியாகக் கேட்டிருக்கிறார்.

சீனாவின் கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் இணக்கத்தை ஏற்படுத்த சர்வதேச நாணய நிதியம் களைத்துவிட்டது. ஆகவே, இந்தியாதான் ஒத்துழைக்க வேண்டும் என்ற தொனியை ஜெய்சங்கரிடம் இலங்கை தெளிவுபடுத்தியிருக்கிறது.

இதன் காரணமாகவே வெளியுறவு அமைச்சர் அலி சப்ரியைச் சந்தித்த பின்னர் கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட ஜெய்சங்கர், மற்றைய நாடுகளின் கடன் மறுசீரமைப்புகளை இலங்கை எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய தேவை இல்லை எனவும் இந்தியா அனைத்தையும் செய்யும் என்றும் உறுதியளித்திருக்கிறார்.

இது, இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான இந்தியாவின் வெறும் ஆறுதல் வார்த்தையல்ல. இது புதுடில்லி பகிரங்கப்படுத்திய உண்மை. அதாவது ஈழத்தமிழர் விவகாரத்தை வைத்து இலங்கைக்கு இனிமேல் அழுத்தம் கொடுக்கமாட்டோம். தேவையான உதவிகளைச் செய்வோம் என்பதே அந்த உண்மை. ஆகவே இலங்கையின் எதிர்பார்ப்பு நிறைவேறியுள்ளது.

அத்துடன் இலங்கையும் தமக்கு அடங்காமல் அமெரிக்கா - சீனாவுடன் நேரடியாக உறவைப் பேணி வல்லரசு நாடு என்ற இந்தியாவின் கனவுக்கு ஆபத்து வந்துவிடுமோ என்ற புதுடில்லியின் அச்சத்திற்கும் நிம்மதியான பதில் இலங்கையிடம் இருந்து இந்தியாவுக்குக் கிடைத்திருக்கிறது.

அதற்கு ஏற்ப இலங்கையுடன் இந்தியா ஒப்பந்தம் ஒன்றையும் வெள்ளிக்கிழமை கைச்சாத்திட்டுள்ளது. இந்திய அரசின் ஆதரவுடன் இலங்கையில் அமுல்படுத்தப்பட்ட உயர் தாக்க சமூக அபிவிருத்தித் திட்டத்தின் (High Impact Community Development Project- HICDP) வரம்பை அதிகரிப்பது தொடர்பான இருதரப்பு ஒப்பந்தமே கைச்சாத்தாகியுள்ளது. இலங்கையின் சார்பில் நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவும் இந்தியா சார்பில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவும் கையெழுத்திட்டனர்.

2005 ஆம் ஆண்டு மே மாதம் முதன்முதலில் கைச்சாத்திடப்பட்ட இலங்கையில் சமூக மேம்பாட்டுத் திட்டம் தொடர்பான ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் சுமார் பத்து பில்லியன் டொலர்கள் உதவிகளை இலங்கை கட்டம் கட்டமாகப் பெறவுள்ளது. வடக்குக் கிழக்கு என்றில்லாமல் இலங்கைத்தீவின் சகல பகுதிகளிலும் சமூகக் கட்டமைப்பை மேம்படுத்துவதே இந்த ஒப்பந்தத்தின் அடிப்படை நோக்கம் என்று அததெரன இணையத்தளம் விபரிக்கின்றது.

அதேவேளை இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னதாக இந்திய கடற்படை கப்பலான ஐ.என்.எஸ். டெல்லி, இலங்கையின் திருகோணமலை துறைமுகத்தில் முகாமிட்டுள்ளது. தமிழ் பேசும் மக்களின் தாயகமான கிழக்கு மாகாணம் திருகோணமலை துறைமுகம், இந்தியாவின் பாதுகாப்பு விவகாரத்தில் மிக முக்கியமான ஒன்றாகப் பார்க்கப்படுகிறது.

முந்நூற்றுத் தொன்நூறு பேருடன் இந்தியப் போர்க்கப்பல் திருகோணமலையில் தரித்து நிற்பதாக ஒன்இந்தியா என்ற ஆங்கில இணையத் தளம் கூறுகின்றது.

ஆகவே, இலங்கையில் இந்தியாவின் எதிர்பார்ப்பும் விருப்பங்களும் நிறைவேறியுள்ளன. அதேநேரம் இலங்கை எதிர்பார்க்கின்ற ஈழத்தமிழர் விவகாரத்தில் இந்தியா அழுத்தம் கொடுக்கக்கூடாது. மற்றும் பதின்மூன்று பற்றியும் பேசக் கூடாது என்ற விருப்பங்களும் நிறைவேறியிருக்கின்றன.

ஆனால், பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டுமென அமைச்சர் ஜெய்சங்கர் காட்டமாகக் கூறியதால் இலங்கைக்குப் பயம் ஏற்பட்டுள்ளதாக இந்திய ஆங்கில ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுத் தமிழ் நாட்டைத் திருப்திப்படுத்துவதாகக் கற்பனை செய்கின்றன.

கொழும்பை மையமாகக் கொண்ட தமிழ் நாளிதழ்கள் மற்றும் தமிழ் செய்தி இணையங்களும் அரசியல் தீர்வு வந்துவிட்டது என்ற தொனியில் பதின்மூன்றுக்கு இந்தியா கொடுத்த பெரும் அழுத்தம் என்று முக்கியப்படுத்தியுள்ளன.

பதின்மூன்றை இலங்கை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று இந்தியா 2009 மே மாதத்தில் இருந்து இன்று வரை கடந்த பதின்னான்கு வருடங்களில் பல தடவை அழுத்தம் கொடுத்திருக்கின்றன.

2012 ஆம் ஆண்டில் இருந்து கடந்த 2022 மார்ச் மாதம் வரை ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களிலும் பதின்மூன்று உண்டு. ஆனால், இலங்கை அது பற்றிக் கவனமே செலுத்தவில்லை. பதின்மூன்று பற்றி இலங்கை கருத்தில்கூட எடுக்கவும் இல்லை.

ஈழத்தமிழர்கள் அதனை ஏற்க விரும்பவில்லை என்பதைக் காரணம்கூறி, அந்தத் திருத்தச் சட்டத்தில் இருந்த காணி பொலிஸ் அதிகாரங்கள்

(18 ஆம் பக்கம் பார்க்க...)

# சென்னையில் நடைபெற்ற புத்தகத் திருவிழா அனுபவப் பகிர்வு

கருணாகரன்

மிகப் பிரமாண்டமாக நடந்து முடிந்துள்ள 46 ஆவது சென்னை புத்தகத் திருவிழாவில் 16 கோடி ரூபாய்க்கு புத்தக விற்பனை நடந்துள்ளது. இதைவிட தமிழகம் முழுவதிலுமுள்ள மாவட்டங்கள் தோறும் தொடர்ந்து புத்தக் காட்சிகளும் விற்பனையும் நடக்கிறது. கடைகள், பதிப்பகங்கள், இணைய விற்பனை போன்றவை தனி. டிஜிற்றல் யுகம் என்று சொல்லப்படும் இந்தக் காலத்திலும் இந்தளவுக்கு புத்தக வாசிப்பு தொடர்ந்திருப்பது சிறப்பே. ஆனாலும் இது போதாதென்றே பலரும் கூறுகிறார்கள். எட்டுக்கோடி தமிழர்கள் உள்ள தமிழ்நாட்டில் இது போதாது என்பதே அவர்களுடைய நியாயம். தமிழ்நாட்டில் ஒரு நாள் மது விற்பனை 300 கோடியாக இருக்கும்போது இந்தத் தொகை எந்த மட்டில்? என்பதே இவர்களுடைய கவலை.

ஆனால், மது போதைப்பொருள் பாவனை வேறு. புத்தக வாசிப்பு வேறு. புத்தகங்கள் ஒரு வகையில் அறிவுத்துறை சார்ந்தவை. அவற்றை வாசிப்போரில் அனேகர் செறிவான வாழ்க்கையை வாழ முற்படுவோர். அவர்களிடம் ஒழுங்கும் நற்குணங்களும் இருக்கும். வாழ்க்கையை அர்த்தமுடன் அமைதியாக வாழ முற்படும் எண்ணமிருக்கும். தங்கள் வாழ்க்கையை மட்டுமல்ல, மற்றவர்களுடைய வாழ்க்கையையும் அது அழகாக்குகிறது. பாதுகாக்கிறது. அப்படியே அது சூழலையும் கவனம் கொள்கிறது என்பதால்தான் புத்தகங்கள் வாழ்க்கையை செழுமையாக்குகின்றன என்று சொல்லப்படுவதுண்டு. இதைத் தெளிவாகத் தெரிந்தாலும் பலரும் புத்தக வாசிப்பில் ஈடுபடுவது குறைவு. காரணம், படித்தவர்களில் பலர்கூட புத்தக வாசிப்பில் கரிசனையற்று, வேறு பொழுது போக்குகளில் ஈடுபடுகின்றனர். வேறொன்றுமில்லை. சோம்பலும் அக்கறையின்மையும்தான்.

ஆனால், ஒரு புத்தகத்தை நீங்கள் வாசிக்கும்போது உங்களுக்குப் பல விடயங்கள் தெரியவருகின்றன. அரசியல், சமூகம், பண்பாடு. மொழி, உளவியல், வரலாறு, பொருளியல், மனித உறவுகளிடையே உள்ள வேறுபாடுகள், ஏற்படுகின்ற சிக்கல்கள், வெவ்வேறு நிலப்பரப்புகள், கால நிலைகள் எனப் பல விடயங்களைத் தெரிந்து கொள்கிறோம். இது நமது வாழ்க்கையை இலகுவாக்குகிறது. எதைப் பற்றியும் தெரியும்போது அதை இலகுவாகக் கையாள முடியும். உதாரணமாக, உங்களுக்கு வாகனமொன்றைப் பற்றித் தெளிவாகத் தெரியும் என்றால், அதை இலகுவாக நீங்கள் கையாள முடியும். ஓட்டவும் அதைத் திருத்தம் செய்யவும் இயலும். அப்படித்தான் புத்தகங்கள் நம்முடைய வாழ்க்கையை இலகுபடுத்துகின்றன. நம்முடைய மனதை இலகுவாக்குகின்றன. நம்மை இலகுவாக்கி விடுகின்றன.
என்பதால் புத்தங்கள் ஒரு கருவியைப் போல, ஒரு சக பயணியைப் போல, ஒரு தந்தையை, தாயைப்போல நமக்குப் பல விதமாக உதவுகின்றன. என்பதால்தான் புத்தக வாசிப்பைப் பற்றி பெரியோர்கள் அனைவரும் சிறப்பாகக் கூறியிருக்கிறார்கள். ஒரு நூலகம் திறக்கப்படும்போது நூறு சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன என்றார் மாவோ. வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான் என்றார் காந்தி. கற்றலே மனிதனின் முதன்மைச் செயற்பாடு என்றார் லெனின். கருத்து மக்களைப் பற்றிக் கொண்டால் சக்தியாக உருவெடுக்கும் என்றார் கார்ல் மாக்ஸ். இதனால்தான் இப்பொழுது சிறைச்சாலைகளிலேயே நூலகங்களை அமைக்க வேண்டும் என்று அழுத்திக் கூறுகிறார்கள்.



46 ஆவது சென்னைப் புத்தகக் காட்சியை மாண்புமிகு தமிழ்நாடு முதல் அமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்

நாம் நம்முடைய பிள்ளைகளுக்கு புத்தக வாசிப்பை அறிமுகப்படுத்துவதில்லை. அவர்களை அதில் ஈடுபடுத்துவதுமில்லை. பயிற்றுவிப்பதுமில்லை. இன்று இலங்கைத் தமிழ்ச் சமூகத்தில் போதைப் பொருள் பாவனையும் வன்முறைகளும் அதிகரித்துள்ளன என்றால், அதில் இளைய தலைமுறை தீவிரமாக ஈடுபடுகிறது என்றால் அதற்குப் பெரும்பொறுப்பு பெற்றோருக்கே உண்டு.

பிள்ளைகளை புத்தக வாசிப்புக்குள்ளாக்குதல், ஓவியம் தீட்டுதல், புகைப்படம் எடுத்தல், எழுத்தில் ஈடுபடுத்தல், நடன, நாடக நிகழ்வுகளில் பங்கேற்க வைத்தல், விளையாட்டுகளிலும் சமூக வேலைத்திட்டங்களிலும் வீட்டுப்பணிகளிலும் ஈடுபட வைத்தல் என்றெல்லாம் செய்திருந்தால் இந்தளவுக்கு சீர்கெட்டுப் போயிருக்க மாட்டார்கள். பண்பாட்டுத் தலைநகரம் நம்முடையது என்று சொல்லிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. அந்தப் பண்பாட்டுப் பெறுமதியை பேணுவதும் அதை மேம்படுத்தி எடுப்பதுமே முக்கியமானது.

முன்னர் ஒவ்வொரு ஊர்களிலும் சனசமூக நிலையங்கள் சிறப்பாக இயங்கின. அந்த நிலையங்களில் இளைய தலைமுறை பங்கேற்றது. இப்போதுகூட சில சனசமூக நிலையங்கள் அப்படி இயங்குகின்றன. உதாரணமாக பண்டத்தரிப்பு - காலையடி மறுமலர்ச்சி சனசமூக நிலையம், கொக்குவில் வளர்மதி சன சமூக நிலையம் போன்றவற்றை அப்படிச் சொல்லமுடியும். இளைய தலைமுறையை ஆற்றுப்படுத்தும் விதமாக எழுத்து, வாசிப்பு, விளையாட்டு, அரங்கச் செயற்பாடுகள் எனப் பலவற்றிலும் இவை செயற்படுகின்றன. கூடவே புத்தகக் காட்சிகளையும் நடத்துகின்றன.

இப்படியான சூழலில்தான் சென்னைப் புத்தகக் காட்சியைப் பற்றியும் அதைப்போல நம்முடைய சூழலில் நடக்கின்ற புத்தகக் காட்சிகளைப் பற்றியும் சில விடயங்களை இங்கே பார்க்க முயற்சிக்கிறேன்.

சென்னை புத்தகக் காட்சி என்பது தனியே புத்தகங்களைக் காட்சிப்படுத்துவது, விற்பனை செய்வது என்பதோடு முடிவதில்லை. அது ஒரு மிகப் பெரிய பண்பாட்டு நிகழ்வு. தமிழ்நாட்டு அரசு அதற்கு மிகப் பெரிய அனுசரணையை அளிக்கிறது. அங்கே ஆயிரத்துக்கு மேற்பட்ட காட்சியகங்கள் - விற்பனையகங்கள் அமைக்கப்படுகின்றன. பல ஆயிரக்கணக்கான நூல்கள் புத்தம் புதிதாகப் பதிக்கப்பட்டு அரங்குக்கு வருகின்றன. பல நூற்றுக் கணக்கான எழுத்தாளர்கள் கூடுகிறார்கள். எழுத்தாளர்களுக்கும் எழுத்தாளர்களுக்குமிடையிலான சந்திப்புகள் நடைபெறுகின்றன. எழுத்தாளர்களும் வாசகர்களும் சந்தித்துக் கொள்கிறார்கள். வாசகர்களும் வாசகர்களும் சந்திக்கிறார்கள். மட்டுமல்ல, புலம்பெயர் நாடுகளிலிருந்தும் மலேசியா, சிங்கப்பூர், இலங்கை போன்ற தேசங்களிலிருந்தும் எழுத்தாளர்களும் வாசகர்களும் புத்தகச் சந்தைக்காக வருகிறார்கள். அங்கே கலை நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள், நூல் வெளியீடுகள், நூல் அறிமுகங்கள் எனப் பல நிகழ்ச்சிகளும் நடக்கின்றன. ஆக மொத்தத்தில் இதொரு திருவிழாவே. என்பதால்தான் இது புத்தகத் திருவிழா என்று சொல்லப்படுகிறது.

இந்தப் புத்தகத் திருவிழாவுக்கு அனுசரணையாக அதே காலப்பகுதியில் தமிழ் இலக்கியத் திருவிழா, சென்னை சங்கமம், சர்வதேச புத்தகத் திருவிழா போன்றவையும் அரசினால் நடத்தப்படுகிறது. இதெல்லாம் மக்களுக்கு இவற்றின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன.

இந்தப் புத்தகத்திருவிழாக்களில் அரச தலைவர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள், திரைப்பட இயக்குநர்கள், நடிகர்கள், அரச அதிகாரிகள், துறைசார் நிபுணர்கள் எனப் பலரும் பங்கேற்கின்றனர். இவர்கள் எல்லோரும் சம்பிரதாயத்துக்காக இந்தப் பங்கேற்புகளில் கலந்து கொள்ளவில்லை. இவர்களும் எழுத்தாளர்களாகவும் இலக்கிய வாசகர்களாகவும் இருக்கிறார்கள்.

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களாக தமிழ்நாட்டிலிருந்து பிரதிநிதித்துவம் செய்யும் சு.வெங்கடேசன், தமிழச்சி தங்கபாண்டியன், கனிமொழி, பா.ரவிக்குமார், தொல் திருமாவளவன் எல்லோரும் எழுத்தாளர்கள், இதழியலோடு தொடர்புபட்டவர்கள். ஏன். வை.கோபாலசாமி எழுத்தாளர் என்பதோடு நல்ல வாசகர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதைப்போலவே அங்குள்ள பொலிஸ் அதிகாரிகள் உட்பட அரச அதிகாரிகளிலும் பலரும் நல்ல வாசகர்கள். அல்லது எழுத்தாளர்களாகவே உள்ளனர். ஆகவே, இவர்கள் சம்பிரதாயத்துக்காக அல்லாமல் பிரக்ஞை பூர்வமாகவே இந்த நிகழ்வுகளில் பங்கேற்கிறார்கள். அதாவது தகுதியுடன் பங்கேற்கின்றனர். நம்முடைய சூழலில் இந்த நிலையே வேறு. இங்கே நூலகம் என்றாலே என்ன என்று தெரியாத, புத்தகத்தைத் தொட்டறியாத, வாசிப்பு என்றால் என்னவென்றறியாத, தாங்கள் முன்னெடுக்கின்ற அரசியலே என்னவென்று புரியாத அரசியல்வாதிகள்தான் உள்ளனர்.

இங்கே இலங்கையில் ஒருசில இளைஞர்கள் ஆர்வத்தோடு எழுத்திலும் புத்தக விற்பனைகளிலும் அங்கங்கே ஈடுபடுகின்றனர். குடத்தனை சிவசேகரன், பண்டத்தரிப்பு தனுஜன், எங்கட புத்தகங்கள் குலசிங்கம் வஸீகரன், வவுனியா பண்டாரவன்னியன் புத்தகசாலை, ஏறாவூர் சப்றி, வாழைச்சேனை திலீப், அக்கரைப்பற்று சிராஜ் என இவர்கள் தங்களால் முடிந்த அளவுக்கு இந்தப் பணியைச் செய்கின்றனர்.






இதைப்போல ஜீவநதி பரணி, கலைமுகம் எமில், வனம் சாதிரி - சாஜித் குழுவினர், பெருவிரல் சுதர்ம மகாராஜன் அணியினர் போன்றோரும் இந்த மாதிரியான முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். ஆனால், இதெல்லாம் போதாது. இது பெருந்திரள் மக்களின் கவனத்துக்குச் செல்ல வேண்டும். அப்படியாயின் அதற்கு பல்வேறு தரப்புகளின் அனுசரணையும் ஆதரவும் தேவை. இங்கே அரச தரப்பினால் நடத்தப்படும் மாகாண சபை, பிரதேசசெயலக, மாவட்டச் செயலக கலாசார விழாக்களே தங்களைத் தாங்களே பாராட்டிக் கொண்டாடும் நிகழ்வுகளாகச் சுருங்கிப் போயுள்ளன. படைப்பாளிகளும் கலைஞர்களும் இங்கெல்லாம் பயன்படுத்தப்படுகிறார்களே தவிர, பாராட்டப்படுவதோ மதிப்பளிக்கப்படுவதோ இல்லை.

(தொடரும்)

# வடபுலத்தின் அடிநிலை மக்களின் குரலாக ஒலித்த கே.டானியல்

முதல் சந்திப்பு 23

முருகபூபதி

மார்கழி மாத குளிர்காலத்தின் போது, 1975 ஆம் ஆண்டு டிசம்பரில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் எனது முதலாவது கதைத் தொகுதி "சுமையின் பங்காளிகள்" நூலுக்கு அறிமுக நிகழ்வு நடந்தது. அதற்கு பத்தாண்டுகளுக்கு முன்னர், 1964 இல் அதே டிசம்பர் மாதம் யாழ்ப்பாணத்தை விட்டு ஒரு மாணவனாக வெளியேறி, மீண்டும் எழுத்தாளனாக அங்கே 1975 இல் தோன்றினேன்.

மல்லிகை ஜீவா நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துவிட்டு அழைத்திருந்தார். தலைமை எழுத்தாளர் சு.இராஜநாயகன் மாஸ்டர். பேச்சாளர்கள் செம்பியன் செல்வன், மௌனகுரு. முதல் பிரதி பெற்றவர் இலக்கிய ஆர்வலர் இளவாலை மணியம்.




எனது ஏற்புரையில், "புலமைப்பரிசிலுடன் யாழ்.கனகரத்தினம் மத்திய கல்லூரிக்கு வந்து, 1964 இல் அதற்கு கும்பிடு போட்டதற்கு Home Sick மாத்திரம் காரணம் அல்ல. சாதி என்றால் என்னவென்று தெரியாத அன்றைய எனது பிஞ்சுமனதிற்கு சாதிக் கொடுமை பற்றி உணர்த்தியதும் இந்த யாழ். மண்தான். என்னுடன் படித்த ஒரு மாணவனுக்கு இழைக்கப்பட்ட அவமானம் எனது மனதில் ஆழமாகப் பதிந்தது. இந்த மண்ணில் இனி மிதிக்கக்கூடாது என திடசங்கற்பம் பூண்டு புறப்பட்டேன். பத்தாண்டு காலம் வடபுலத்தை திரும்பியும்



பார்க்கவில்லை." என்றேன்.

நிகழ்ச்சிக்கு வருகை தந்திருந்த ஒருவர், எனது தோளைத் தொட்டு அணைத்து, தான் "டானியல். உமது கதைகளைப் படித்திருக்கின்றேன். ஊருக்குத் திரும்புவதற்கு முன்னர் வந்து சந்திக்கவும். ஜீவா வழிகாட்டுவார்" என்றார். அன்றுதான் அவரை முதன் முதலில் சந்திக்கின்றேன்.

அவரது பிரசித்தமான ஸ்டார் கராஜுக்கு சென்றேன். தேநீர் தருவித்து உபசரித்தார். அண்ணன் உறவுபற்றி தெரியாத எனக்கு அவர் அப்போது உடன்பிறந்த சகோதரனாக தோற்றம் தந்தார்.

அடிக்கடி அவர் உதிர்த்த 'தம்பி' என்ற வார்த்தையில் நெகிழ்ந்துவிட்டேன். ஜீவா, தெணியான், என்.கே.ரகுநாதன், மௌனகுரு, நுஃமான், இளங்கீரன், தெளிவத்தை ஜோசப், பிரேம்ஜி உட்பட பல எழுத்தாளர்கள் எனது பெயர் சொல்லி அழைத்துக்கொண்டிருந்தபோது, டானியல் "தம்பி" என அன்பொழுக விளித்தார்.

நிகழ்ச்சியில் நான் மறைமுகமாகச்சொன்ன தகவலை டானியல் கேட்டார். மாணவ நண்பருக்கு நேர்ந்த அவமானத்தைச் சொன்னதும் சிரித்தார்.

"உதென்ன கதை. இதனைவிட பெரிய கதைகள் இங்க நடந்திருக்கு. உமக்குத் தெரியாது தம்பி." என்றார்.

டானியல் வர்க்க முரண்பாடுகள் பற்றிய தெளிவுடன்தான் எழுதினாரா...? என்பதில் எனக்கு சந்தேகம் இருந்தது. பஞ்சமர் முதல் பாகம் என்னைக் கவர்ந்தளவுக்கு இரண்டாம் பாகம் இல்லை. இரண்டு பாகங்களும் இணைந்த முழுநாவல் கொழும்பில் அறிமுகமானபோது நானும் பேசினேன்.

பொருளாதாரரீதியில் நலிவுற்றவர்கள் உயர் சாதியிலும் அடிநிலையிலும் இருக்கிறார்கள். பொருளாதார வசதியில் உயர்ந்தவர்கள் தாழ்ந்த சாதியினரிடத்தும் உயர்ந்த சாதியினரிடத்தும் வாழ்கிறார்கள். இதனை டானியல் உணர்ந்து கொண்டாரோ தெரியவில்லை. ஆயினும், ராஜஸ்ரீகாந்தனுக்கு அவர் அளித்த பேட்டியிலிருந்து இதனை சுட்டிக் காட்டுதல் பொருத்தம்.

டானியல் :- முதல் பிரதானமான முரண்பாடாக வர்க்க முரண்பாடு இருந்தாலும் அந்த வர்க்க முரண்பாட்டை வழி நடத்திச் செல்வதற்கு பயிற்சி அளிப்பதற்கான ஆயுதமாக என் எழுத்தைப் பாவித்தேன். யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு விடயத்தை இங்கு சின்ன உதாரணமாகச் சொல்ல விரும்புகிறேன். இங்கு சாதிகள் பல உண்டு. அடிப்படையில் தாழ்த்தப்பட்ட மக்களும் இருக்கினம் - உயர்ந்த ஆட்களுக்குள்ள பணம் இல்லாத ஆட்களும் இருக்கினம். ஆனால், பணமில்லாத உயர்ந்தவன், அந்த நிலப்பிரபுத்துவ முறையில் ஏற்பட்ட பழக்கவழக்கங்களிலிருந்து இன்னமும் விடுபடவில்லை. இன்னமும் அவன் சாதி பார்த்துக் கொண்டுதானிருக்கிறான். ஆகையினால் அவன் சாதி பார்க்கின்ற வரையில், இவன் வர்க்க ஒற்றுமையைப் பற்றிப் பேசிப் பிரயோசனமில்லை.

காசில்லாதவன், பொருளில்லாதவன், வாழ்வதற்கு வழி இல்லாதவன் தங்களின் சொந்தக்காரர்களின் காணியிலேயே இரவல் குடியிருக்கிறவன், எந்தவிதமான தொழில் துறையும் இல்லாதவனும்கூட பழக்கத்தின் அடிப்படையில் வந்த வழிமொழி நடைமுறைகளினால் இன்னமும் சாதி பார்த்துக் கொண்டிருக்கும் போது, தாழ்த்தப்பட்டவன் வர்க்க ஒற்றுமையைப் பற்றிப் பேசிப் பிரயோசனமில்லை. எப்போது இவன் வருவானென்றால், இவனும் அவனுடன் போராடி அவனுக்கு எதிராகப் போராடக்கூடிய வல்லமையைப் பெற்ற காலத்தில்தான் அவனையும் சேர்த்துக் கொள்ள முடியுமே தவிர, அவன் அதுவரையில் சாதி பற்றிப் பேசாமல் இருக்கப் போவதில்லை."

டானியல் நோயினால் பாதிக்கப்பட்டிருந்த வேளையிலும் எழுதினார். ஆதாரங்கள் தேடி குக்கிராமங்கள் தோறும் அலைந்தார்.

" மக்களே எனது எஜமானர்கள்! அவர்களிடம்தான் படித்தேன். எனது மக்களின் அடிப்படை உரிமைகளுக்காகவும் அவர்களின் விடிவுக்காகவுமே எழுதிக் கொண்டிருப்பேன்." எனச்சொல்லிக் கொண்டிருந்த டானியல் கண் சத்திர சிகிச்சைக்காக தமிழகம் சென்றிருந்த வேளையில், தஞ்சாவூரில் மறைந்தார். இச்செய்தியை முதலில் எனக்குச் சொன்னவர் டானியலின் நண்பர் சில்லையூர் செல்வராசன். இறுதியாக டானியலை, அவர் தமிழகம் செல்லும் முன்பு காவலூர் ராசதுரை வீட்டில் சந்தித்தேன்.

அவர் இளங்கோவனுடன் சிகிச்சைக்காக தமிழகம் சென்றவிடத்தில் தஞ்சாவூரில் மறைந்தார். அவரது கல்லறை அங்கிருக்கிறது.

இலங்கை வானொலி கலைக்கோலம் நிகழ்ச்சியில் டானியலுக்கான அஞ்சலி உரையை ஒலிபரப்புவதற்கு ஆவன செய்து, ஒலிப்பதிவு நடந்து கொண்டிருந்தபோது மேலிடத்திலிருந்து திடீரென வந்த உத்தரவில் சாதி என்ற சொல்லை நீக்கச் சொன்னார்கள். எனக்குச் சிரிப்பு வந்தது. ஈழத்து இலக்கிய வளர்ச்சி என வாசிக்கக்கூடாது!? இலங்கை இலக்கிய வளர்ச்சி என்றுதான் வாசிக்க வேண்டுமென உத்தர விட்ட வானொலி அல்லவா!

பின்னர், சாதி என்ற சொல் வருமிடங்களில், அடிநிலை மக்கள் எனத்திருத்தினேன். வாசித்தவர் எனதும் டானியலினதும் நண்பரான பத்திரிகையாளர் வீரகத்தி தனபாலசிங்கம்.

டானியலின் கடிதங்களில், கலை, இலக்கியம், சமூகம், அரசியல் பேசப்பட்டிருக்கும். தமிழக சிந்தனையாளர் பேராசிரியர் அ. மார்க்ஸுடன் டானியலுக்கு நீடித்த கடிதத்தொடர்பு இந்த அம்சங்களை கொண்டிருக்கின்றன.

இக்கடிதங்கள் நூலாக வந்துள்ளது. "வேற்றுமைகளுக்கு நிறைய காரணங்களை கற்பிக்கலாம். ஆனால், ஒற்றுமைப்படுவதற்கு காரணங்களைத்தேட வேண்டிய சமுதாயத்தில் வாழும் துர்ப்பாக்கியசாலிகள்தான் எழுத்தாளர்கள்."- என்ற சிந்தனைதான் டானியலின் குறிப்பிட்ட கடிதங்களைப்படித்தபோது எனக்குள் தோன்றியது. தமிழில் தலித் இலக்கிய முன்னோடி என்று விதந்து போற்றப்படும் கே.டானியல் யாழ்ப்பாணத்தில் 1927 ஆம் ஆண்டு பிறந்து தமிழகம் தஞ்சையில் 1986 ஆம் ஆண்டு மறைந்தார். ■



# தெரிந்த சினிமா தெரியாத சங்கதி

54

ரமணி




ஸ்ரீதரின் வெற்றிப்படங்களின் வரிசையில் காதலிக்க நேரமில்லை முக்கியமானது. ரவிச்சந்திரன், காஞ்சனா ஆகிய இருவரும் சினிமாவில் அறிமுகமான படம். நகைச்சுவைப் படமான காதலிக்க நேரமில்லை ரசிகர்களை மகிழ்வித்தது. இயக்குநர் ஸ்ரீதரும் கவிஞர் கண்ணதாசனும் மிகவும் நெருக்கமான நண்பர்கள். இடைக்கிடை இருவரும் கோபித்துக்கொள்வார்கள். பின்னர் சமாதானமாகி விடுவார்கள்.

கவிஞர் கண்ணதாசன் பலருடன் முரண்படுவதும் பிறகு சேர்வதும் சகஜம். கவிஞர் சிலருடன் மட்டும்தான் நெருங்கிப் பழகுவார். அதில் இயக்குநர் ஸ்ரீதர் முக்கியமானவர். அடுத்தடுத்த வெற்றிகளுடன் ‘வித்தியாசமான இயக்குநர்’ எனப் பெயர் எடுத்திருந்தார். ‘தேன்நிலவு’ தொடங்கி அவரின் எல்லாப் படங்களுக்கும் கவிஞர்தான் பாடல்கள் எழுதுவார். ஸ்ரீதர் கவிஞரைவிட இளையவர். அவரை கவிஞர் ‘ஸ்ரீ’ என்றுதான் அழைப்பார்.

புதுமுகங்களை வைத்து இயக்கவுள்ள ஒரு புதுப்படம் தொடர்பாகப் பேச ஸ்ரீதரும் கண்ணதாச னும் சந்தித்தனர். ஸ்ரீதரின் உதவி இயக்குநர் சி.வி.ராஜேந்திரன் (ஸ்ரீதரின் சகோதரர்), புரொடக்‌ஷன் மனேஜர், பஞ்சு அருணாசலம், அவரின் உதவியாளர்களும் அங்கே இருந்தனர். கவிஞர், எம்.எஸ்.வி, ஸ்ரீதர் மூவரும் உள்ளே அறையில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். மற்றையவர்கள் வெளியே சாப்பிட்டுக்கொண்டிருந்தனர்.

மலேசியாவில் இருந்து ஒருவர் வந்திருக்கிறார்.அவருடைய பெயர் ரவிச்சந்திரன்.ரொம்ப ஸ்டைலா இருக்கான். அழகான விமானப் பணிப்பெண்ணைச் சந்தித்தேன். காஞ்சனா என்ற அந்தப் பெண்ணிடம் நடிக்க சம்மந்தமா எனக் கேட்டேன். ஒத்துக்கொண்டார். லவ் காமெடி கலந்த கலர்ப்படம் எடுக்கப்போரன். “காதலிக்க நேரமில்லை” அதுதான் டைட்டில் என ஸ்ரீதர் சொன்னார்.

மிக இளம் வயதிலேயே புகழ் அடைந்ததால் ஸ்ரீதருக்கு தன்னம்பிக்கை அதிகம். அது அவரின் பேச்சிலேயே எதிரொலிக்கும். அது அகந்தையோ, திமிரோ கிடையாது. ஆனால், சமயங்களில் அது எதிரில் உள்ளவர்களைக் காயப்படுத்திவிடும். அன்றும் அப்படி ஆரம்பித்திருக்கிறார். ‘என்னைத் தவிர இந்த ஷாட்டை வைக்கிறதுக்கு எவன் இருக்கான், ஒரு பயலைச் சொல்லுங்க கவிஞரே’ எனச் சொல்லி இருக்கிறார். ‘ஆமாம் ஸ்ரீ, நீ திறமையானவன்...’ என, கவிஞர் பாராட்டியிருக்கிறார். பிறகு, போகப்போக இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு சிறிது நேரத்தில் கோபமாக அறையில் இருந்து வெளியேறினார் ஸ்ரீதர்.

‘சொந்தப் படம். ஏன் புதுமுகங்களைப் போட்டு ரிஸ்க் எடுக்குற?என கண்ணதாசன் கேட்டபோது. ஸ்ரீதருக்கு கோபம் வந்து விட்டது. ‘நான் நினைச்சா எது வேணும்னாலும் பண்ணுவேன் எனக்கு எவனும் தேவை இல்லை’ என ஸ்ரீதர் சத்தமாகச் சொன்னார்.

‘நான் வேணாமா, விஸ்வநாதன் கூட வேணாமா?’என்று கண்ணதாசன் கேட்டார். ‘நீங்க ரெண்டு பேரும் பெரிய பக்கபலம்தான். ஆனா, நீங்க இல்லைனாக்கூட என்னால படம் எடுக்க முடியும்’ ஸ்ரீதர் கோபத்துடன் பதிலளித்தார்.

‘அப்படின்னா நாங்க இல்லாம இந்தப் படத்தை நீ எடுத்துப்பாரேன் என்று கண்ணதாசன் விளையாட்டாகச் சொன்னார். ஸ்ரீதர் கோபப்பட்டு அறையை விட்டு கோபத்துடன் வெளியேறினார். கண்ணதாசன் கோபப்படாமல் சிரித்தபடி அமைதியாக இருந்தார்.

“காதலிக்க நேரமில்லை” படத்தின் படப்பிடிப்பு ஒரு வாரத்தில் பொள்ளாச்சியில் நடைபெற்றது. பாடல் தயாராகவில்லை. திடீரென சித்ராலய கோபுவை அழைத்த ஸ்ரீதர், நீ போய் கவிஞர்கிட்ட கதையைச் சொல்லி பாடல்களை ரிக்கார்ட் பண்ணிட்டு வந்திடு’ என, அனுப்பினார். அங்கிருந்தவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். கண்ணதாசனும், எம்.எஸ்.விஸ்வநாதனும் வேண்டாம் எனக் கூறியவர் கண்ணதாசனிடம் ஒருவரைத் தூது விட்டார். ‘ஒரே ஒரு பாட்டு மட்டும் கண்டிப்பா இந்த சிற்றுவேஷனுக்கு வரணும். மத்ததை உங்க இஷ்டத்துக்கு எழுதச் சொல்லிட்டார்’ என சித்ராலயா கோபு சொன்னார். கதை, திரைக்கதை கோபு காமெடி ஏரியாவில் கோபு கில்லாடி.

வெறும் நான்கு நாட்களில் ஏழு பாடல்களை எழுதிக் கொடுத்தார் கவிஞர். அதில் வந்த ‘விஸ்வநாதன் வேலை வேணும்...’ மட்டும்தான் சிற்றுவேஷனுக்கு எழுதியது. மற்ற பாடல்கள் எல்லாம் ‘இந்தப் பாட்டை இங்கே வெச்சுக்கலாம், அதை அங்கே வெச்சுக்கலாம்’ எனக் கவிஞரும் கோபுவும் முடிவு செய்தவை. ஒலிப்பதிவு முடிந்து பாடல்களைக் கேட்டுவிட்டு ஸ்ரீதர் துள்ளிக் குதித்துவிட்டார். ‘படம் சூப்பர் ஹிட். பிச்சிக்கிட்டுப் போயிடும். அந்தாளு ஞானிய்யா. ‘நான் இல்லாம நீ நிக்க முடியுமா?’ சபதம் போட்டான். அது உண்மைதான். இப்பதான்யா எனக்குப் புரியுது. இப்ப சொல்றேன். நீ வேணும் எண்டாப் பாரு, இந்த செஞ்சரியிலேயே இதுதான்யா பெஸ்ட் பிக்சர்’ ஸ்ரீதரின் பேச்சில் அவ்வளவு உற்சாகம்.

சந்தோஷ மிகுதியால் கவிஞருக்கு ட்ரங்க் கால் புக்பண்ணி பேசினார் ஸ்ரீதர். ‘நீங்க பொள்ளாச்சிக்குப் புறப்பட்டு வரணும். நாலு நாளாவது என்கூடத் தங்கணும்’ என்றார். கவிஞர் வேண்டாம் என புறக்கணித்தவர் அவரை அன்புடன் அழைத்தார். கண்ணதாசன் நான்கு நாட்கள் பொள்ளாச்சியில் தங்கி ஸ்ரீதரை உற்சாகப்படுத்தினார்.

60-களில் வந்த படம், ‘சாரதா’. அந்தப் படத்தின் எல்லாப் பாடல்களையும் கவிஞர்தான் எழுதினார். படப்பிடிப்பும் முடிந்தது. படத்தைப் போட்டுப்பார்த்த பிறகு ஒரு பாட்டு சேர்த்தால் நன்றாக இருக்குமே என நினைத்து இருக்கிறார்கள். ஆனால், அந்தச் சமயத்தில் கவிஞர் ஊரில் இல்லை. படம் வெளியாக வேண்டிய நெருக்கடி என்பதால் பாடல் அவசரமாகத் தேவைப்பட்டது. கவிஞர் வெளியூர் சென்றுவிட்டார் என அவரது உதவியாளர் பஞ்சு அருணாசலம் தெரிவித்தார். அவசரமாகப் பாடல் தேவை என்பதால் படலை எழுதும்படி இசையமைப்பாளர் கே.வி.மகாதேவன், பஞ்சு அருணாசலத்திடம் கூறினார். பஞ்சு அருணாசலம் மறுப்புத் தெரிவித்தார். கவிஞரிடம் நான் சொல்கிறேன் பாட்டை எழுது என கே.வி.மகாதேவன் வற்புறுத்தினார். தயக்கத்துடன் பஞ்சு அருணாசலம் எழுதிய பாடல் இன்றுவரை திருமண வீட்டின் தேசிய கீதமாக ஒலிக்கிறது. அந்தப் பாடலை கண்ணதாசன் எழுதியதாக பலர் இன்றைக்கும் நம்பிக்கொண்டிருக்கின்றனர்.

‘மணமகளே மருமகளே வா வா. உன்வலது காலை எடுத்து வைத்து வா வா.’ என்ற அந்தப் பாடல் பெரிய வரவேற்பைப் பெற்றது.

ஈஸ்ட்மென் கலரில் வெளியான முழு நீள தமிழ்த் திரைப்படங்களில் இதுவும் ஒன்றாகும். படம் தெலுங்கில் பிரேமிஞ்சி சூடு என்ற பெயரிலும் ஹிந்தியில் பியார் கியே ஜா என்றும் கன்னடத்தில் ப்ரீத்தி மது தமாஷே நோடு என்றும் மராத்தியில் தூம் தாடகா என்றும் ரீமேக் செய்யப்பட்டது.

படம் மிகப்பெரிய வசூல் வேட்டையினை நடத்தியது. தொடர்ந்து 175 நாட்கள் திரையரங்கில் ஓடி சாதனை புரிந்தது.

ஆனால், இத்தனை சாதனைகளுக்கு முன்னாலும் பெரிய போராட்டத்தினையே இயக்குநர் ஸ்ரீதர் சந்தித்து இருக்கிறார். முதல் பிரச்சினை பூஜையில் துவங்கியது. ஸ்ரீதரின் ஆசையின்படி ஒளிப்பதிவாளர் வின்செண்ட்டின் மகனை கேமராவினை ஆன் செய்ய ஏற்பாடு நடைபெற்றது. ஆனால், பூஜை துவங்கிய நேரத்தில் வின்செண்ட் மகன் செட்டில் இல்லை. பூஜை செய்ய வேண்டிய ஐயரும் இல்லை.

இதனால் இயக்குநர் ஸ்ரீதரே சாமிக்கு ஆராத்தி எடுத்திருக்கிறார். ஆனால், அதுவும் அணைந்து விட்டதாம். இப்படி தொடர் தடங்கலால் படக்குழு அதிர்ந்துள்ளது. என்ன தொடர் அபசகுணமாக உள்ளதே எனப் பேசப்பட்டதாம். படப்பிடிப்பு துவங்கினால் ஒரு காட்சியில் கேமராவின் பெல்ட்டும் அறுந்து விழுந்து விட்டதாம்.

ஆனால், இயக்குநர் ஸ்ரீதர் இந்தப் பிரச்சினைகளால் கொஞ்சம்கூட மனம் தளரவில்லை. தொடர்ந்து படப்பிடிப்பினை நடத்தினார். அவர் உழைப்பே படத்தினை வெற்றி வழிக்கு அழைத்துச் சென்றது. ■





**திருக்குறளின் காமத்துப்பால் இலக்கணம் வகுத்துள்ள காதல் இலக்கியத்தின் இனிமையைப் பகிர்ந்துகொள்ளும் கட்டுரைத் தொடர்.**

# குறள் இன்பம்

**24**

செந்தமிழ்ச்செல்வர் பாடும்மீன் சு.ஸ்ரீகந்தராசா

**கண்கள் துடிப்பதேன்? கண்ணீர் வடிப்பதேன்?**

கருத்தொருமித்து காதல் சோடி அது. இருவரும் உயிரும் உடலும்போல ஒருவரை ஒருவர் கணமும் பிரிந்திருக்காமல் வாழ்ந்து வந்தார்கள். உள்ளூரில் அவனுக்குப் போதிய வருமானம் இல்லாது போனதால், வேறு ஊருக்குச் செல்வதற்கு இருவரும் முடிவு செய்கிறார்கள். முதலில் அவன் மட்டும் செல்வதென்று தீர்மானித்தார்கள். அதன்படி அவன் முதன்முதலாக அவளைப் பிரிந்து சென்றான். நல்லதை நினைத்து தன்னை அவன் பிரிந்து செல்வதற்குச் சம்மதித்து அவனை அனுப்பிவைத்த அவளால் அவன் சென்றபின்னர் அந்தப் பிரிவைத் தாங்க முடியவில்லை. தனிமையின் கொடுமை அவளை வாட்டத் தொடங்கியது. உடல் மெலிந்தது. உள்ளம் கலங்கியது. எதையும் சிந்திக்க முடியாமல் அறிவு மயங்கியது. அவன் பிரிந்து சென்ற நாள் முதல் கண்கள் இரண்டும் குளமாகிக் கண்ணீரைச் சொரிந்து கொண்டிருக்கின்றன. நேரம் காலம் பார்க்காமல் எப்போதும் அந்தக் கண்கள் படும் வேதனையால் தூங்க முடியவில்லை. அவளால் தாங்க முடியவில்லை. இப்போது அந்தக் கண்களின்மேல் அவளுக்கு கோபம் வருகிறது.

அவளின் நிலைகண்டு வருந்தி ஆறுதல் சொல்ல வந்த தோழியிடம், தானே தன் கண்களின்மேல் குற்றம் சாட்டி எடுத்துரைக்கிறாள். " நீயே கேளடி தோழி! என்னிலே தவறொன்றும் இல்லை. எல்லாமே இந்தக் கண்கள் செய்த வேலை. அன்று ஒருநாள் அவரைக் கண்டபோது ஆசையாகப் பார்த்தது இந்தக் கண்கள்தானே! கண்டதும் காதல் கொள்ளக் காரணம் இந்தக் கண்கள்தானே! அதன்பின்னர், அவரைக் காணத் துடித்ததும் கண்டபோதெல்லாம் கதை பேசிக் களித்ததும் இந்தக் கண்கள்தானே! ஒருவரையொருவர் நன்றாகத் தெரிந்து கொண்டதும் உள்ளத்தால் புரிந்து கொண்டதும் வாழ்வில் இணைந்து கொண்டதும் அள்ளக் குறையாத உடல் இன்பத்தைப் பகிர்ந்து கொண்டதும் எல்லாமே...எல்லாமே நடந்தது இந்தக் கண்களால்தானே! இவ்வளவுக்கும் காரணமான இந்தக் கண்கள் இப்போது ஏன் அழுகின்றன? தாங்கொணாக் காதல் நோயினால் துன்பக்கடலில் தன்னைத் தத்தளிக்க வைத்த இந்தக் கண்கள் இப்போது ஏன் அவரைக் காணவில்லை என்று துடிக்கின்றன? காணவேண்டுமென்று இப்படி ஏன் தவிக்கின்றன, கண்ணீரை வடிக்கின்றன?

அவர் நல்லவரா கெட்டவரா என்று ஆராயாமல், முதல் பார்வையிலேயே அவரைக் கவர்ந்து என் உள்ளத்தில் வைத்துவிட்டு, அவரால் காமநோயை எனக்குத் தரச் செய்துவிட்டு இப்போது, அவர் வரவில்லையே என்று அழுவதும் வந்துவிட்டால் மீண்டும் சென்றுவிடுவாரோ என்று உழல்வதும் தூங்கவிடாமல் சுழல்வதும் எதற்காக" என்று அவள் பித்துப் பிடித்தவளைப் போலத் தோழியிடம் பிதற்றுகிறாள்.

இதைப் போன்ற காட்சிகளை நம் மனக்கண் முன் கொண்டு வந்து நிறுத்துகின்ற குறட்பாக்களை "கண்விதுப்பு அழிதல்" என்ற இந்த அதிகாரம் கொண்டுள்ளது.

**"கண்தாம் கலுழ்வது எவங்கொலோ, தண்டா நோய்**
**தாம்காட்ட யாம்கண்டது"** **( 1171)**

இந்தக் கண்கள்தானே என் காதலனை எனக்குக் காட்டின. அவ்வாறு காட்டியதால்தான் நான் அவரைக் கண்டேன். அவரால்தான் எனக்கு இந்ததீராத காதல் நோய் வந்திருக்கிறது. அவரை நான் கண்டதற்கும் எனக்கு காதல் நோய் வந்ததற்கும் காரணமான இந்தக் கண்கள் இப்போது அவரைக் காணவேண்டும் என்று அழுவது ஏன்? என்று தோழி கேட்பது இந்தக் குறளின் பொருள்.

அன்று கண்கள் தெரிந்துகொள்ளவில்லை!

இன்று பரிந்து சொல்லவில்லை!

அன்று அவனை முதன் முதலாகக் கண்டபோது அவனில் அவளுக்கு ஒருவித ஈர்ப்பு ஏற்பட்டது. அவனோடு பேசவும் பழகவும் வாய்ப்புக் கிடைத்தமையின் விளைவாக நாளாக நாளாக அது காதலாக மலர்ந்தது. பெற்றோர்களின் இசைவுடன் கற்புமணம் நடந்தது. இப்போதும் அவர்களிடையே ஆழமான காதல் நிலவுகிறது. உள்ளங்கள் இரண்டும் ஒன்றாகிக் கலந்துள்ளன. உடல்கள்தான் தற்காலிகமாகப் பிரிந்துள்ளன. இந்த நிலையில் அவளைக் காதல் நோய் வாட்டுகிறது. நோயின் கொடுமையால் அவளின் எண்ணங்கள் குழம்புகின்றன. வார்த்தைகள் தளம்புகின்றன. உண்மையில் அது எண்ணங்களின் குழப்பமல்ல, காதல் நோயின் துன்பத்தால் உண்டாகும் இன்பம். அந்த இன்பத்தின் விளைவுதான் இந்தப் பரவசப் பிதற்றல்.

அவனைக்கண்டது அவள், காதலித்தது அவள், இல்லறத்தில் இணைந்தது அவள். அவனோடு இன்பம் அனுபவித்தது அவள். அவன் பிரிந்து செல்வதற்கு இசைந்தது அவள். இவ்வாறு மகிழ்வாக இருந்த போதெல்லாம், அவனைக் காட்டிய கண்களை அவள் வேறுபடுத்திப் பார்த்ததில்லை. இப்போது பிரிவால் துன்பப்படும்போது மட்டுமே அவளுக்குத்தான் வேறு, தன் கண்கள் வேறு என்று பிரித்துப்பார்க்கும் மனோநிலை வருகிறது. தனது உறுப்புக்களின் மீதே வெறுப்பு வருகின்ற நிலைமை இது. தீராத காதல் நோயின் அறிகுறிகளில் இதுவும் ஒன்று என்பது, ஆழமாகக் காதல் வயப்பட்டவர்களின் அனுபவமாகும்.



இங்கே அவள் தன் கண்களின்மீதே குற்றம் சாட்டுகிறாள். எப்படி? "இப்படியான துன்பமான விளைவுகள் வரும் என்பதைக் கொஞ்சமும் ஆராய்ந்து பார்க்காமல், அவரை எனக்குக் காட்டி என்னைக் காதலில் வீழ்த்திய, மைதீட்டிய இந்தக் கண்கள், இப்போது அவரைப் பிரிந்து துன்பத்தில் நான் வாடுவது தங்களால்தான் என்று உணராமல், வீணாகத் தவிப்பது ஏன்?" என்று கேட்கிறாள்.

**"தெரிந்துணரா நோக்கிய உண்கண் பரிந்துணராப்**
**பைதல் உழப்பது எவன்"** **(1172)**

இந்தக் குறளில் வள்ளுவப் பெருந்தகை தந்திருக்கும் இரண்டு சொற்கள் நம்மை வியந்து மகிழ வைக்கின்றன. ஒன்று "உண் கண்", மற்றையது, "பைதல்". உண் கண் என்றால் மையுண்ட கண்கள், அதாவது மைதீட்டப்பட்ட கண்கள். "பைதல்" என்றால் நோயுற்ற அல்லது வருந்துகின்ற என்று பொருள். காதலனை முதன் முதலாகக் காணும்போது அவளது கண்கள் மகிழ்ச்சியாக இருந்தன. மைதீட்டி ஒப்பனை செய்திருந்தன. இப்பொழுது அவை வருத்தத்தில் இருக்கின்றன, அதனால் மைதீட்டப்படவில்லை. ஆக, மகிழ்வோடு இருந்தன என்பதைக் காட்டுவதற்கு மையிட்ட கண்கள் என்று கூறப்பட்டுள்ளது. அதனால்தான் அவை "தெரிந்து உணராமல்" என்னைக் காதலில் வீழ்த்தின என்றும், இப்போது வருத்தத்தில் இருப்பதால், தங்கள் தவறைப் "பரிந்துணராமல்" இருக்கின்றன என்றும் நாம் பொருள்கொள்ள வேண்டும்.

விரைந்து கண்டதும்,
கரைந்து நிற்பதும்!

அன்று, அவரைக் கண்டவுடன், மிகுந்த ஆர்வத்துடன், சிறிதும் தாமதிக்காமல் சட்டென்று அவரை ஏற்று மகிழ்ந்தன இந்தக் கண்கள். ஆனால் இன்று, தாங்களாகவே அழுகின்றன. இது நகைப்பிற்கு இடமாக உள்ளது. இவ்வாறு அவள் தோழியிடம் கூறுவதாக அடுத்த குறள் சொல்கிறது. இதில் "கதும் என" வேகத்தைக் காட்டுகிறது. கண்டவுடன் சட்டென்று காதல்கொள்ள வைத்த கண்கள் என்பது கருத்து. "தாமே கழுலும்" என்ற சொற்கள், அவரின் பிரிந்து சென்றதைப்பற்றி யாரும் சொல்லாமலே, "அவரைக்காணவில்லையே" என்ற ஏக்கத்தால் தாங்களாகவே கண்கள் அழுகின்றன என்று அவள் சொல்வதை இந்தக் குறள் வெளிப்படுத்துகின்றது.

**"கதுமெனத் தாம் நோக்கித் தாமே கழுலும்**
**இதுநகத் தக்கது உடைத்து"** **(1173)**

**(தொடரும்)**

தொடர்கதை

# இரு மலர்கள்

மலர் 11

யாழ் சத்யா

கவி சந்தித்தாளா ஸாமை?

கவின்யாவுக்கு பல்கலைக்கழக விரிவுரைகள் ஆரம்பமாகியது. பல்கலைக்கழக வாழ்விலே முதலாவது நாள்.

வெண்ணிற பருத்தி ஷல்வாரில் இடப்பக்கத் தோளில் ஷோலை நீள வாக்கில் போட்டிருந்தாள். இடது கையில் கறுப்பு பட்டியிட்ட மணிக்கூடும் காதுகளில் ஒற்றை வெண் முத்துத் தோடுகளுமாக அவள் ஆயத்தமாகி தந்தையின் காரை நோக்கி வரவும் பாடசாலைக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்த அருண்யா,

“யார் இந்த தேவதை
யார் இந்த தேவதை
ஒரு கோடி பூக்கள்
உலகெங்கும் உண்டு
இந்த பெண் போல அழகான பூவொன்று உள்ளதா”

பாட ஆரம்பித்தாள்.

“விடிய காலமை பம்பல் (கேலி) அடிக்காமல் போ அருண்” சொன்ன கவியிடம்,

“வாவ்... அக்கா! உண்மையா சூப்பராக இருக்கிறாய்... இப்பவே பாக்க டொக்டரம்மா மாதிரி இருக்கிறாய் தெரியுமா? கவனமாக கூட்டிக் கொண்டு போங்கோப்பா... பொடியள் எல்லாம் பின்னால வரப் போகுதுகள்...”



அருணி முடிக்க முதல் அவள் பின்னால்வந்து முதுகில்ஒன்று போட்ட தெய்வநாயகி,

“கெதியா போய் பள்ளிக்கூடம் போற வேலையை பார்... அவளைப் பார்... டொக்டரா வரப் போறாள்... நீயும் இருக்கிறியே... ஆடு, மாடு மேய்க்கத்தான் லாயக்கு...”

“நான் ஏன் ஆடு மாடு மேய்க்கோணும்... நான் ஏயல் எடுத்து முடிய அஜித் மாதிரி ஒருத்தனைக் கல்யாணம் பண்ணி ஜாலியா இருப்பன்... நமக்கு உந்தக் காலம் பூராவும் படிக்கிற வேலையெல்லாம் சரிவராது. விளங்கிச்சோ... கெதியா மாப்பிள்ளை பாக்கிற வேலையைப் பாருங்கோ... சொல்லிப் போட்டன்... அதுவும் ரெஸ்டோரன்ற் வைச்சிருக்கிறவனா... அப்பத்தான் நான் சமைக்கத் தேவேல்ல...”

“அடி செருப்பால... ஓஎல் கூட எடுக்கிற வழியக் காணேல்ல... கழுதைக்கு கல்யாணம் கேட்குதோ? முதல் உந்த மொட்டை மண்டைய ஒருத்தனும் கட்ட மாட்டாங்கள். தலைமுடியை வள முதல்ல... இப்ப பள்ளிக்கூடத்துக்கு நேரம் போகுது... கெதியாப் போய் தலையை இழு...”

அம்மாவும் மகளும் போடும் சண்டையை பார்த்தவாறே புன் சிரிப்புடன் கவியும் சந்திரஹாசனும் விடை பெற்று யாழ் பல்கலைக்கழகத்தை நோக்கிச் சென்றார்கள். பல்கலைக்கழக வாயிலுக்கு சிறிது தூரம் முதலே கவின்யாவும் அவள் தோழி அஞ்சலியும் காரை விட்டு இறங்கினர். இரண்டாம், மூன்றாம் வருட மாணவர்கள் கண்டு விட்டால் இன்னும் அதிகமாக ராக்கிங் செய்வார்களே என்ற பயத்தில்.

அவளது பாடசாலை தோழி அஞ்சலியும் மருத்துவப் பீட அனுமதி பெற்றிருந்தாள். அவளையும் கவி தன்கூடவே அழைத்து வந்திருந்தாள். இருவருமாகச் சேர்ந்து தங்கிக் கொள்வதாக முடிவெடுத்து நல்லூரடியில் சந்திரஹாசனின் நண்பர் ஒருவரின் வீட்டு மாடியில் அறை ஒன்றை வாடகைக்கு எடுத்து இருந்தனர்.

மருத்துவ பீட அனுமதி பெற்ற மகிழ்ச்சியை விட ராக்கிங் பயமே அதிகமாக இருக்க இருவரும் தங்கள் பீடத்தை நோக்கிச் சென்றனர்.

முகாமைத்துவ பீடத்தைக் கடந்து தான் மருத்துவ பீடம் செல்ல வேண்டும். இவர்கள் வருவதை தூரத்திலேயே கண்டு விட்டான் சுதர்சன். முதலாம் ஆண்டு மாணவி ஒருவரை நர்ஸரி ரைம் பாடச் சொல்லி வதைத்துக் கொண்டு நின்ற நிரோஜனின் தோளை மெதுவாக சுரண்டினான்.

“அடே மச்சான்... அது எங்கட கவியும் அஞ்சலியும்எல்லே... பாரடா.. நாங்கள்எல்லாம்கொழும்பு என்று நினைக்க அக்காவும் தங்கையுமா நல்லா பூச்சுத்திட்டாங்கள்.”

கடுப்பாகிய சுதர்சனை மெதுவாக அடக்கிய நிரோஜன் ஸாம் எங்கே என்று பார்த்தான். அவனோ கவி வரும் திசைக்கு எதிர்ப்புறமாக இருந்த இருக்கையில் இருந்து சில மாணவர்களை கையாலே நீச்சல் அடிக்க உத்தரவு போட்டுக் கொண்டிருந்தான். இடையில் இருந்த மிகப் பெரிய மரம் வேறு வாயிலை மறைத்துக் கொண்டிருந்தது.

அதை அவதானித்து விட்டு நிரோஜன் பக்கத்தில் நின்ற வடமராட்சி பிரதேசம் இல்லாத வேறு இடத்தைச் சேர்ந்த மாணவர்கள் சிலரிடம் ரகசியமாக ஏதோ சொன்னான். அவர்களும் மகிழ்ச்சியாக தலையை ஆட்டிக் கொண்டனர். கவி அவர்கள் இருந்த இடத்தை நெருங்க முதல் அவள் காணாதவாறு நிரோஜனும் சுதர்சனும் ஒரு முதலாம் ஆண்டு மாணவியுடன் கடலை போட முயன்று கொண்டிருந்த சுதனையும் இழுத்துக் கொண்டு ஸாம் பக்கத்தில் சென்று அமர்ந்து கொண்டார்கள்.

கவியும் அஞ்சலியும் பக்கத்தில் வந்ததும் “அக்காமார் ரெண்டு பேரும் எங்க போறீங்க?” என்றான் ஒருத்தன்.

அவனது கடுமையான குரலைக் கேட்டுப் பயத்தில் நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொள்ள கவிக்கு பேச வார்த்தையே வரவில்லை. அஞ்சலி தான் தன்னை சமாளித்துக் கொண்டு “நாங்க மெடிக்கல் பக்கல்டி” என்றாள் அவர்கள் முகாமைத்துவ பீட மாணவர்கள் என்பதை அறிந்து.

“மெடிக்கல் பக்கல்டி என்டால் என்ன கொம்பு முளைச்சிருக்கே உங்களுக்கு? இங்க எல்லாரும் ஜப்னா கம்பஸ்... அதுக்குப் பிறகுதான் மிச்சம் எல்லாம். ஓகே? சீனியர்ஸ்ஸ கண்டால் முதல்ல குட் மோர்னிங் சொல்ல வேணும் என்று தெரியாதா?”

இருவரும் இல்லை என்று மெதுவாக தலை அசைத்து விட்டு மெல்லிய குரலில் “குட் மோர்னிங் சீனியர்” என்றார்கள்.

“எந்த ஊர் நீங்கள்? என்ன பேர்?

“வல்வெட்டித் துறை... கவின்யா...”

“தும்பளை.. அஞ்சலி...”

“ஓ அஞ்சலியா? எங்க அஞ்சலி பாப்பா மாதிரி உன்ர பேரைச் சொல்லு பாப்பம்”

உள்ளே தோன்றிய கடுப்பை மறைத்தபடி,

“ஒரெலி, ரெண்டெலி, மூணெலி, நாலெலி, அஞ்சலி” மூன்று வயது குழந்தை மாதிரியே சொன்னதைக் கேட்டு ஒரு நிமிடம் அனைவரும் நகைத்தனர். கவிக்கே அடுத்து தன்னை என்ன கேட்கப் போகிறார்களோ என்ற பயத்தை மறந்து புன்னகை மலர்ந்தது.

அவர்கள் இருவரையும் ஸாம் இருந்த மரத்திற்கு சிறிது தூரம் அப்பால் அழைத்து சென்றிருந்த படியால் ஸாமினாலும் அவர்கள் குரலைக் கேட்க முடியவில்லை.

“ரெண்டு பேரும் ஒரு தேவாரம் பாடுங்கோ பாப்பம்”

சாதாரணதரப் பரீட்சைக்குப் பின் மறந்து விட்டிருந்த தேவாரம். எதைப் பாடுவது என்று குழப்பத்தில் கவியைப் பார்த்தாள் அஞ்சலி. தினமும் காலை ஆராதனையில் கவின்யா தேவாரம் பாடுவதினால் மனப்பாடமாயிருந்த தேவாரத்தைப் பாட ஆரம்பித்தாள். அஞ்சலி அவளோடுசேர்ந்து வாயசைத்தாள்.

“பிடியதன் உருகுமை கொளமிகு கரியது
வழிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கரிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில் வலி வளமுறை இறையே”

தேனினும் இனிய குரலில் உள்ளம் கசிய நெக்குருகி தன்னை மறந்து கண்களை மூடி அவள் பாட அனைவரும் தங்களை மறந்து எழுந்து நின்றனர்.

அவள் பாடி முடித்ததும்,

“சரி... சரி... பாட்டுப் பாடின எல்லாம் காணும்... ஃபாக்கை இங்க வைச்சிட்டு இந்தப் பூவை பிடி” என்று பக்கத்திலே செவ்வரத்தை செடியில் மலர்ந்திருந்த அழகிய சிவப்பு கொத்து செவ்வரத்தம் பூ ஒன்றை பறித்துக் கொடுத்தான் ஒருவன்.

“அந்த மரத்துக்குப் பின்னால இருக்கிற ஃப்ளு சேர்ட் போட்டவரிட்ட இந்தப் பூவைக் குடுத்து ஐ லவ் யூ சொல்லிட்டு வா”

கேட்டதும் தான் தாமதம் கவியின் கண்கள் பொலபொலவென கண்ணீர் உகுக்க ஆரம்பித்தன. தன் கண்ணாளனிடமே இன்னமும் காதலைச் சொல்லாமலிருக்க விளையாட்டுக்கே என்றாலும் கண்டவனிடம் எல்லாம் போய் காதல் சொல்லிவிட முடியுமா என்ன?

“நோ... என்னால முடியாது. வேற ஏதாச்சும் சொல்லுங்கோ அண்ணா... நான் செய்யிறன்... இது மட்டும் என்னால ஏலாது...”

“என்னடி... இது ராக்கிங்கா... வேற ஏதுமா...? நீ சீனியரா... நாங்க சீனியரா...? நாங்க சொல்லுறதைத் தான் நீ செய்யணும்... புரிஞ்சுதா...?”

விழிகளால் வழிந்த நீரைத் துடைத்தபடி,

“அதுக்காக கண்ட கண்ட ஆக்களிட்ட போயெல்லாம் என்னால இதைச் சொல்ல முடியாது.”

அத்தனை நேரமாக பதுமையாக பயந்தபடி நின்றவள் கொஞ்சம் நிமிர்ந்தே அவர்களோடு ஒரு யுத்தத்திற்கு ஆயத்தமாகினாள்.

(மலரும்...)

# பக்திப் பரிசு

சிறுகதை

இனுவில் பவா



“சர்வாணி தொலைத் தொடர்புச் சேவை” அந்தப் பெயர்ப்பலகை திடமாக மின்னொளியில் பிரகாசித்துக் கொண்டிருந்தது. ஆனால், உள்ளே பர பரத்த மனத்துடன் இருந்த கல்பனாவை பிளாஸ்ரிக் கதிரை தாங்கியிருந்தது. கணவனின் செய்திக்காக அவள் காத்திருந்தாள். காலை 5.30 மணிக்கு முதல் விமானத்தில் பிரயாணத்திற்காக புறப்பட்டுப் போன கணவனின் செய்தி இன்னும்கிடைக்காமல் போகவே நிலவின் ஒளியில் வீடு திரும்பினாள்.

“என்னம்மா ரெலிபோன் வந்ததா?’

“இன்னும் எடுக்கேல்ல.”

“ஏன்?”

“தெரியேல்லை... மாமி! பகல் 11.00 மணிக்கெல்லாம் பிளேன் போயிருக்கும்.”

“அப்ப ஏன் எடுக்கேல்ல!! லைன் கிடைக்கேல்லையோ?’

“தெரியேல்ல..!!”

இருவரும் ஒருவருக்கொருவர் தம் பதட்டத்தைக் காட்டிக் கொள்ளாமல் கதைத்துக் கொண்டனர். கல்பனா சுவாமியறை சென்று மங்கியிருந்த விளக்கின் திரியைத் தூண்டிவிட்டு விளக்கிற்கு நெய்யூற்றினாள். விளக்கின் சுடர் எதிரேயிருந்த ஐயப்பன் படத்தில் பட்டுப் பிரகாசித்தது. நிம்மதியுடன் படுக்கைக்குப் போனாள். ஆனாலும், அவளுக்கு நித்திரை வரவில்லை.

விமலன், கல்பனாவின் கணவன் பிரபல வியாபாரி.

“கல்லறை வரை வேண்டும் சில்லறை” என்று ஒரு புத்தகத்தில் என்றோ படித்த ஞாபகம். இப்போது அவனின் முதல் அல்லவா முழுதும் போய்விட்டது. மனக் கஷ்டம் தீர பஜனை செய்யலாம் என எண்ணி சுவாமி அறைக்குப் போனான். அறை இருண்டு கிடந்தது. ஐயப்பன் படத்தையும் காணவில்லை. அதனால் கணவன் மனைவிக்குள் விரிசல்!

“சாமி! சாமி! என்றீர்களே இப்போ நாம் தெருவெல்லாம் சரணம் போட வேண்டிய நிலை.”

“கல்பனா! சாமி எம்மைக் கைவிடார்.”

“எம் வாழ்க்கையை வாரிவிட்டாரேயப்பா”

“கல்பனா அவர் மீது இன்னும் எனக்கு நம்பிக்கை, அவர்தான் எமக்கு ஆறுதல்.”

“எனக்கு ஆறுதல் தந்தது இந்தக் கடிதங்களும் தந்திகளும்தான்” எனக்கூறி விமலனின் முகத்தில் அவற்றை வீசியெறிந்தாள்.

கோபம் கண்ணை மறைக்கினும் கும்பிட்ட தெய்வம் குறுக்கே நின்றது. நிதானமாக அவற்றைப் பொறுக்கி எடுத்தான் விமலன். துக்கத்தில் துவண்ட கல்பனாவின் கண்ணில் படாது பிரிக்கப்படாமலே பல கடிதங்கள் அதில் வங்கி முத்திரையுடன் ஓர் கடிதம் பிரிக்கப்படாமல் இருந்தது.

“விமலன் ஸ்ரோர்ஸ்” அவனது சொத்து. அதேபோல் கவினேசும் விமல் கல்பனாவின் உயிருள்ள சொத்துத்தான். விமலன் தந்தை இறந்தபின் வியாபாரத்தைக் கவனித்து வருகின்ற ஒரு கலைப்பட்டதாரியானாலும் வியாபார நுட்பம் தெரிந்திருந்ததால் வாழ்வில் நன்கு முன்னேறி சமூகத்தில் பிரபல்யமாகிவிட்டான். என்னதான் வாழ்வில் சகலவசதிகள் இருந்தாலும் அவ்வப்போது ஏற்படுகின்ற சிறு கஷ்டங்களை மறக்கவும் இந்த இயந்திர வாழ்விலிருந்து சிறிது ஓய்வு எடுக்கவும் ஆன்மீக நாட்டமும், கலாரசனையும் ஒருவனுக்கு அவசியம் வேண்டும். அதற்கு விமலன் விதிவிலக்கல்ல.

“ஐந்தாம் திருப்படி சாமி பொன் ஐயப்பா! ஐயனே பொன் ஐயப்பா!”

விமலனின் ஐம்புலன்களும் அந்தப் பாடலில் லயித்து விட்டன. அப்படியே ஓர் ஐயப்ப பக்தனாக மாலை போட்டு, விரதமிருந்து இப்போ மகரஜோதி தரிசனத்திற்காக சபரிமலை போகவேண்டி கொழும்புக்குப் பயணப்பட்டிருக்கிறான்.

“ஹலோ...நான் கல்பனா கதைக்கிறன்!”

“ஆ...கல்பனா!...நான் சுகமா வந்திட்டன்!”

“என்னப்பா..எங்கட கடை களவு போட்!!”

“நேற்றிரவு நீங்களும்..போட்டியள்..”

“என்னப்பா எல்லாம் போட்டுது!!”!

விமலால் ஒன்றுமே பேசமுடியவில்லை . அவன் உடலால் உணர்வால் மிகவும் பாதிக்கப்பட்டான். அவனுக்கு அடிக்குமேல் அடி. பிளேனால் வந்திறங்கி ஓட்டோ எடுத்து நண்பனின் வீடு விசாரிக்கும் போது ஓட்டோவுடன் பாக், பணம் எல்லாம் பறிபோனது கல்பனாவுக்குத் தெரியாது. எப்படியோ நண்பனின் வீடடைந்து வியாபார நண்பர்களின் உதவியுடன் சபரிமலை போய் ஆண்டவன் சோதனையோ? யார் படைத்த வேதனையோ? என எண்ணி மகரஜோதியில் மனங்கலந்து வழிபட்டான்.

ஆனால், விடயமறிந்த கல்பனா விசரிபோல் ஆனாள். ஐயப்பா உன்னைத் தொழுதோம். எமக்கு இந்த நிலையா? இனி உன்னை வழிபடேன் என்று கூறி படத்தை எடுத்து ஒரு ஓரத்தில் போட்டாள்.

அன்று முதல் சுவாமியறையுடன் அவர்கள் குடும்பமும் இருண்டது. தாயின் நிலைகண்டு கவினேஸ் பள்ளி செல்லாது படுக்கையுடன் ஒட்டிக் கொண்டான். மாமியார் நோய் கண்டு ஆஸ்பத்திரிக்கும் வீட்டிற்குமாக அலைந்து திரிந்தாள். இது போதாதென்று அடிக்கடி பொலிஸ் விசாரணை வேறு. உற்றார் உறவினர் எவ்வளவோ ஆறுதல் கூறினர், தந்திகளும் கடிதங்களும் வந்து குவிந்தன, தொலைபேசியிலும் பலர் துக்கம் விசாரித்தனர். இருந்தும் என்ன புயன்!

தரிசனம் முடிந்ததும் இந்தியாவைச் சுற்றிப் பார்க்க எண்ணியிருந்த விமலன் அருளை மட்டும் வேண்டி பொருளொன்றும் வேண்டாது வெறுங்கையுடன் வீடு வரவேண்டி இருந்தது.

விமலன் கல்பனா இருவரும் சந்தித்துக் கதைத்துக் கொண்ட சோக சம்பவங்கள் அவர்கள் வாழ்வில் இனிச் சரித்திரங்கள்தான். “இப்படியொரு கஷ்டம் இனி யாருக்கும் வரக்கூடாது ஐயப்பா!” என மனதிலே வேண்டிக் கொண்டான்.

கடையைப் பெருப்பிக்க எடுத்த ‘லோனைக் கட்டச் சொல்லித்தான் வந்த வங்கிக் கட்டளையோ? பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்’ என்று பழமொழி சொல்வார்களே அப்படித்தான் எம் நிலையோ? என மனக் குழப்பத்துடன் அதைப் பிரித்துப் படித்தான்.

நீங்கள் கொள்முதல் செய்த ரிதிரேகா சேமிப்பு சான்றிதழ் பி ஜி; 140271 இலக்கத்திற்கு இம்முறை குலுக்கலில் முதல் பரிசான ரூபா 4,800,000. (ரூபா நாற்பத்தெட்டு இலட்சம்) கிடைக்கப் பெற்றுள்ளது. அதற்கான காசோலையை ஆறுமாத காலத்துக்குள்...

விமலன் கண்ணில் இருந்து வந்த கண்ணீரைக் கண்ட கல்பனா மனம் இரங்கி மன்னிப்புக் கேட்டாள். விடயம் தெரிந்த அவள் விழிகள் ஆச்சரியத்தால் விரிந்து கொண்டன. விரிசல் கண்ட உள்ளங்கள் இரண்டும் இணைந்து இன்பங் கண்டன.

“அடியாரைக் காக்க அன்புடன் வருக....”

“வருக வருக வாசவன் மைந்தா.”

“வருக வருக மணி கண்ட...”

ஐயப்ப கவசத்தின் அந்த வரிகள் அவர்கள் வாழ்வின் வசந்த வாசலில் காற்றில் சங்கமித்தன.

**முற்றும்**

# என்ன பிரச்சினை?




## அரச வைத்தியசாலையில் அல்லல்படும் நோயாளிகள்

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் கிளினிக்கிற்குச் செல்லும் நோயாளிகள் மிகுந்த சிரமத்துக்கு ஆளாகிறார்கள். பிறசரைக் குறைப்பதற்காகச் செல்லும் நோயாளிகள் அதிக பிறசருடன் வீட்டுக்குச் செல்கிறார்கள்.

அதிகாலை ஐந்தரை, ஆறு மணிக்கு நம்பர் எடுப்பதற்காகச் செல்பவர்களுக்கு ஏழு மணிக்குப் பின்னர் நம்பர் கொடுப்பார்கள். நம்பர் கொடுக்கும் நடைமுறை ஒரே மாதிரி இருப்பதில்லை. ஒரு நாளைக்கு கொப்பியை அடுக்கச் சொல்வார்கள். இன்னொருநாளைக்கு வந்த வரிசைப்படி கொப்பியை கையில் வைத்திருக்கச் சொல்வார்கள். நம்பரைக் கொடுத்துவிட்டு 20 கொப்பிகளை வாங்கிச் செல்வார்கள். அரைமணித்தியாலத்தின் பின்னர். 20 கொப்பிகளையும் நோயாளிகளிடம் கொடுத்துவிட்டு வரிசையில் நிற்கச் சொல்வார்கள்.



இரண்டு பேரை உள்ளே கூப்பிட்டு பிறசர் பார்ப்பார்கள். அங்குள்ள சிற்றூழியர் கையில் சுற்றிவிட்டு இயந்திரத்தை சுவிச்சைப் போட்டுவிட்டு வேறு அலுவல் பார்ப்பார். சிறிது டார்கள். அவர்கள் 9 மணிக்குத் தான் வருவார்கள். ஒருவர் விடுமுறையில் நின்றால் அவருக்குப் பதிலாக இன்னொருவர் வரமாட்டார். அங்கேயும் தள்ளு முள்ளுதான். 6 மணிக்கு வைத்தியசாலைக்குச் செல்பவர்கள் சுமார் மூன்றரை மணித்தியாலம் காய வேண்டிய நிலை.

ஒரு மாதம் வைத்தியருக்குக் காட்ட வேண்டும் அடுத்த மாதம் வைத்தியருக்குக் காட்டாமல் மருந்து எடுக்கலாம். வைத்தியருக்குக் காட்டாமல் மருந்து எடுப்பவர்களும் மூன்று மணித்தியாலம் காய வேண்டிய நிலை உள்ளது.

வைத்தியசாலையில் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் உள்ளது. நோயாளிகளும், நோயாளிகளைப் பார்வையிடுபவர்களும் அங்கே சைக்கிளைப் பாதுகாப்பாக வைக்கலாம். அங்கே நூற்றுக்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்கள் பாதுகாக்கப்படுகின்றன. வைத்தியசாலைக்குச் செல்பவர்களின் சைக்கிள்களைவிட வெளிமாவட்டத்துக்கு வேலைக்குச் செல்பவர்களின் மோட்டார் சைக்கிள்களைப் பாதுகாப்பதில் அதிககவனம் செலுத்தப்படுகிறது. அரச வைத்தியசாலைக்



ம. அருந்தவநாதன்
கரவெட்டி

நேரத்தில் வந்து கொப்பியில் பிறசரை எழுதுவார். வைத்தியர்களும் மருத்துவ தாதிகளும் பார்க்கும் வேலையை வைத்தியசாலையின் சிற்றூழியர் பார்ப்பது சரியாகுமா?

வைத்தியரின் அறைக்குச் செல்வதற்கு தள்ளு முள்ளுப்படுவார்கள். அங்கு நோயாளிகளை ஒழுங்குபடுத்துவதற்கு யாரும் நிற்க மாட்டார்கள். எட்டுமணிக்கு வெளியே வந்தால் மருந்து கொடுப்பவர்கள் வரமாட் குரிய பாதுகாப்பு நிலையத்தில் வெளியாளரின் வாகனங்களைப் பாதுகாக்க அனுமதி கொடுத்தது யார்?

எல்லா இடத்திலும் சைக்கிளைப் பாதுகாக்க 5 ரூபா அறவிடப்படுகிறது வைத்தியசாலையில் 10 ரூபா அறவிடப்படுகிறது. மோட்டார் சைக்கிள் பாதுகாப்பு என்றே ரிக்கெறில் அச்சடிக்கப்பட்டுள்ளது. வைத்தியசாலை நிர்வாகம் இதனைக் கவனத்தில் எடுக்குமா? ■

## மூடப்பட்ட பாடசாலை திறக்கப்பட வேண்டும்

வடமாகாணத்தில் வவுனியா மாவட்டத்தில் நெடுங்கேணி பிரதேசத்தில் மாமடு கிராமம் அமைந்துள்ளது. இங்கு இப்போது 35 குடும்பங்கள் உள்ளது.



வசந்தன் லக்சன்
(மாமடு நெடுங்கேணி)

மாமடு கிராமம் இயற்கையாகவே மிகவும் வளமுள்ள இடமாகும். ஆனால், இதற்கு மேலாக இக்கிராமத்திற்கு வளமும் புகழும் சேர்த்தது “மாமடு ஸ்ரீவாணி வித்தியாலயம்” எனும் பாடசாலையாகும். இது ஏறத்தாள 1995 இக்கிராமத்தில் உள்ள சமூக ஆர்வலர்களால் நிறுவப்பட்டது. அன்றிலிருந்து மாமடு கிராமத்தின் கல்வி தராதரத்தை ‘மாமடு ஸ்ரீவாணி வித்தியாலயம்’ குறையாமல் பார்த்துக் கொண்டது. அத்தோடு தொண்டர் ஆசிரியர்களுக்கும் வாய்ப்பு கொடுக்கும் களமாக இப்பாடசாலை காணப்பட்டது. அது மாத்திரமன்றி இக்கிராம மாணவர்களுக்கு இப்பாடசாலை கல்வியை வழங்கும் அருகிலுள்ள வளமாகவே காணப்பட்டது. இருப்பினும் “மாமடு ஸ்ரீவாணி வித்தியாலயம்” சில விசமிகளால் தூற்றபட்டு கொண்டே இருந்தது. இது காட்டிற்கு அருகில் உள்ள பாடசாலையாகும், கட்டடங்கள் குறைவு, என்பன அவற்றுள் சிலவாகும். ஆனாலும் அங்குள்ள ஆசிரியர்களின் முயற்சியால் பாடசாலையிற்கு அருகில் உள்ள காடுகள் முற்றாக தள்ளப்பட்டது, நீர்தாங்கி கட்டடம் கட்டப்பட்டு நீர் விநியோகம் சீராக இடம்பெற்றது. இதனால் மாணவர்கள் மட்டுமின்றி ஊர் மக்களும் பயன்பெற்றார்கள். இருப்பினும் கிராமமக்கள் தமது பிள்ளைகளை இப்பாடசாலையில் சேர்க்காமல், தொலைவிலுள்ள பாடசாலைகளில் சேர்க்கிறார்கள். இதற்கு அயல் பாடசாலைச் சமூகமும் இதற்கு மிக முக்கிய காரணம் ஆகும். இதனால் இப்பாடசாலையில் மாணவர் எண்ணிக்கை சடுதியாகக் குறைவுற்றது. இதனால் இப்பாடசாலையை வடக்கு கல்வி வலயம் மூடிவிட்டது.

ஆனால், அதிகமான மாணவர்களைச் சேர்த்துத் தந்தால் பாடசாலையை மறுபடியும் திறப்பார்கள் என்கிறார்கள். ஆனால், மாணவர்களைச் சேர்த்து மறுபடியும் பாடசாலையை திறப்பதற்கு, கிராம உத்தியோகத்தர் மற்றும் கிராம மக்களால் இதுவரை எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. ■

## என்ன பிரச்சினை



உங்களைச் சுற்றி நடக்கும் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதற்கு தீம்புனல் தயாராக இருக்கிறது. உங்கள் பிரச்சினைகளை எழுதி தீம்புனல்,
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி,
நெல்லியடி எனும் முகவரிக்கு அல்லது Theempunal gmail.com மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.

சிலம்பு

# சார்ல்ஸின் முடி சூட்டுவிழா

# மே 6

பிரித்தானிய மன்னர் மூன்றாம் சார்ல்ஸின் முடிசூட்டு விழா 2023 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆம் திகதி நடைபெறும் என்று பக்கிங்ஹாம் அரண்மனை அறிவித்துள்ளது.

இங்கிலாந்து மகாராணி 2 ஆம் எலிஸபெத் கடந்த மாதம் 8 ஆம் திகதி காலமானார். அதைத் தொடர்ந்து அவரது மகன் சார்ல்ஸ் இங்கிலாந்தின் புதிய மன்னராக அறிவிக்கப்பட்டார். பாரம்பரிய மரபுப்படி, கையில் செங்கோல் ஏந்தி மன்னர் மூன்றாம் சார்ல்ஸ் அரியணையில் அமர்வார். பிறகு, மதகுருமார்களால் ஆசீர்வதிக்கப்பட்ட பிறகு மன்னருக்கு புனித எட்வர்ட் கிரீடம் சூட்டப்படும். பக்கிங்ஹாம் அரண்மனையில் இருந்து நாட்டு மக்களுக்கு மன்னர் உரையாற்றுவார்.

இதன் பிறகு அரசராக அவரது ஆட்சி அதிகாரபூர்வமாக ஆரம்



பிக்கப்படும். 74 வயதாகும் 3 ஆம் சார்ல்ஸ் மன்னர் இங்கிலாந்து வரலாற்றில் முடிசூட்டிக் கொள்ளும் மிக வயதான மன்னர்.

திய மன்னரின் ஆட்சியில் முதல் நடவடிக்கை, பெயர் தொடர்பாக எடுக்கப்படும் முடிவுதான். சார்ல்ஸ், ஃபிலிப், ஆர்தர், ஜார்ஜ் என்ற தன்னுடைய நான்கு பெயர்களில் ஏதேனும் ஒன்றை அவர் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு இருந்தது.

பெயர் மாற்றத்தை எதிர்கொள்பவர் இவர் மட்டுமே அல்ல.

அரியணைக்கு வாரிசாக இருந்தாலும்கூட இளவரசர் வில்லியம் தானாகவே வேல்ஸ் இளவரசராக மாறமாட்டார். அந்தப் பட்டத்தை அவருக்கு அவரது தந்தை வழங்கவேண்டும்.

இருப்பினும், அவர் உடனடியாக தனது தந்தையின் மற்றொரு பட்டமான டியூக் ஆஃப் கார்ன்வாலை (கார்ன்வால் கோமகன்) பெற்றார். அவரது மனைவி கேத்தரின் கார்ன்வால் டச்சஸ் (கார்ன்வால் சீமாட்டி) என்று அழைக்கப்படுவார்.

சார்ல்ஸ் மனைவியின் பட்டம் ஆங்கிலத்தில் 'க்வீன் கன்சார்ட்' என்பது ஆகும். மன்னரின் மனைவியைக் குறிக்கும் சொல் இது.

சில நாட்டு தலைவர்களின் பதவியேற்பு பாணியில், பிரிட்டிஷ் அரசர் தமது ஆட்சியின் தொடக்கத்தில் "சத்தியப் பிரமாணம்" எதுவும் எடுத்துக்கொள்ள மாட்டார். ஆனால், புதிய அரசர் ஒரு பிரகடனத்தை வெளியிடுவார். அது 18 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்து கடைப்பிடிக்கப்படும் பாரம்பரியமாகும். அதற்கு இணங்க அவர் ஸ்கொட்லாந்து தேவாலயத்தைப் பாதுகாப்பதாக உறுதிமொழி எடுப்பார்.

பிறகு 'எக்காளம்' ஊதுபவர்களின் ஆரவார முழக்கத்துக்குப் பிறகு, சார்ல்ஸை புதிய அரசராக அறிவிக்கும் பொதுப் பிரகடனம் வெளியிடப்படும். இது செயின்ட் ஜேம்ஸ் அரண்மனையில் உள்ள ஃப்ரைரி மாடத்துக்கு மேலே உள்ள பால்கனியில் இருந்து 'கார்ட்டர் கிங் ஆஃப் ஆர்ம்ஸ்' என்று அழைக்கப்படும் அதிகாரியால் செய்யப்படும்.

அவர் தமது அழைப்பில், "கடவுளே, அரசரைக் காப்பாற்று", என்று முழங்குவார். 1952க்குப் பிறகு முதன் முறையாக தேசிய கீதம் இசைக்கப்படும்போது, அதற்கு முன்பாக, இந்த அதிகாரி பிரார்த்தித்த கடவுளே அரசைக் காப்பாற்று என்ற வரிகள் தேசிய கீதத்தில் முதல் வரியாக இடம்பெறும்.

அப்போது ஹைட் பூங்கா, லண்டன் கோபுரம், கடற்படை கப்பல்கள் ஆகியவற்றில் இருந்தபடி துப்பாக்கி குண்டுகள் விண்ணை நோக்கி முழங்கப்படும். அதற்கு மத்தியில் சார்ல்ஸை அரசர் ஆக அறிவிக்கும் பிரகடனம் வாசிக்கப்படும்.

சார்ல்ஸ் முறைப்படி முடிசூட்டப்படும் போதுதான், அவர் அடுத்த தலைமைக்கான நிலையை எட்டும் உயரிய கட்டத்தை அடைகிறார். இந்த விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்பதால், சார்ல்ஸ் பதவியேற்ற உடனேயே முடிசூட்டு விழா நடக்க வாய்ப்பில்லை - ராணி எலிஸபெத் 1952 ஆம் ஆண்டு பெப்ரவரியில் அரியணை ஏறினார், ஆனால் 1953 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை அவர் முடிசூட்டப்படவில்லை.

கடந்த 900 ஆண்டுகளாக வெஸ்ட்மின்ஸ்டர் அபே தேவாலயத்தில் தான் முடிசூட்டு விழா நடைபெற்றது. வில்லியம் தான் அங்கு முடிசூட்டப்பட்ட முதல் மன்னர் ஆக விளங்கினார். அந்த வரிசையில் 40 ஆவது ஆக முடிசூட்டிக் கொள்பவர் சார்ல்ஸ்.

இது ஒரு ஆங்கிலிகன் மத சேவை வழங்கும் தலம். இது கேன்டர்பரி பேராயரால் மேற்கொள்ளப்படுகிறது. விழாவின் உச்சமாக, அவர் சார்ல்ஸின் தலையில் செயின்ட் எட்வர்டின் கிரீடத்தை வைப்பார் - திடமான இந்த தங்க கிரீடம், 1661ஆம் ஆண்டு காலத்துக்குரியது.

லண்டன் கோபுரத்தில் உள்ள மகுட நகைகளில் முக்கியமானதாகும். மேலும் முடிசூட்டும் தருணத்தில் அரசரால் மட்டுமே இது அணியப்படுகிறது (குறைந்தபட்சம் இது 2.23 கிலோ எடை கொண்டது).

அரச குடும்ப திருமணங்களைப் போல அல்லாமல், முடிசூட்டு விழா ஒரு அரசு விழாவாக நடக்கும். அதற்கு அரசாங்கம் பணம் செலுத்துகிறது. இறுதியில் விருந்தினர் பட்டியல் இறுதிப்படுத்தப்படுகிறது.

ஆரஞ்சு, ரோஜா, லவங்கப்பட்டை, கஸ்தூரி மற்றும் அம்பர்கிரிஸ் எண்ணெய்களைப் பயன்படுத்தி புதிய மன்னருக்கு அபிஷேகம் செய்யும் சடங்குகள் இருக்கும். அத்துடன் இசையும் பிரார்த்தனைகளும் இடம்பெறும்.

பக்கிங்ஹாம் அரண்மனையில் மன்னராக இருக்கும் முதல் பால்கனி தருணம், ஒரு மாபெரும் முடிசூட்டு ஊர்வலம், உலகளாவிய நட்சத்திரங்கள் பங்கேற்கும் ஒரு கச்சேரி மற்றும் ஒரு நாள் தன்னார்வத் தொண்டு ஆகியவை மூன்று நாள் நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக இருக்கும். 1953 ஆம் ஆண்டு ராணியின் சேவையைவிட மூன்று மணி நேரம் நடந்ததைவிட குறைவாக இருக்கும் என்று அரச ஆதாரங்களின் வழிகாட்டுதலைத் தவிர, சனிக்கிழமை முடிசூட்டு விழா எவ்வாறு நவீனமயமாக்கப்படும் அல்லது மாற்றப்படும் என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

வாழ்க்கைச் செலவு நெருக்கடியின் காரணமாக, பலர் எதிர்கொள்ளும் தற்போதைய பொருளாதாரச் சிக்கல்களை ஒப்புக்கொள்வதற்கு நிகழ்வுகள் மட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று பரிந்துரைகள் இருந்தன. ஆனால், தங்களுக்குக் கிடைத்த கருத்துகள், மக்கள் ஒரு மாபெரும் தேசிய நிகழ்வின் முழுக் காட்சியைக் காண விரும்புவதாகவும், இன்று பிரிட்டனின் சிறந்ததைக் காட்சிப்படுத்தவும் ஐக்கிய இராச்சியத்தின் பணக்கார மற்றும் தனித்துவமான வரலாற்றைக் கொண்டாடவும் விரும்புகிறார்கள் என்று அரச வட்டாரங்கள் உறுதியாகக் கூறுகின்றன. கேன்டர்பரி பேராயர் தலைமையில் சனிக்கிழமை காலை வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் ராஜா மற்றும் ராணி துணைவரின் முடிசூட்டு விழா நடைபெறும்.

அரண்மனை இது "ஒரு புனிதமான மத சேவை, அதே போல் கொண்டாட்டம் மற்றும் ஆடம்பரத்திற்கான ஒரு சந்தர்ப்பம்" என்று கூறுகிறது, மேலும் அந்த நாளில் இரண்டு ஊர்வலங்களை உள்ளடக்கியது.

"ராஜாவின் ஊர்வலம்" என்று அழைக்கப்படும் பக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து சார்லஸும் கமிலாவும் ஊர்வலமாக அபேக்கு வருவார்கள். சேவைக்குப் பிறகு, "முடிசூட்டு ஊர்வலம்" என்று அழைக்கப்படும் ஒரு பெரிய சடங்கு ஊர்வலம், அவர்கள் பக்கிங்ஹாம் அரண்மனைக்குத் திரும்பி பால்கனியில் குடும்பத்துடன் சேர்வதைக் காண்பார்கள்.

முடிசூட்டு ஊர்வலத்திலோ பல்கனியிலோ எந்தக் குடும்ப உறுப்பினர்கள் தோன்றுவார்கள் என்பதை அரண்மனை சரியாகக் கூறவில்லை.

இந்த முடிசூட்டு விழா இங்கிலாந்து மற்றும் காமன்வெல்த் வரலாற்றில் ஒரு பெரிய மைல்கல் என்று கூறிய கலாசார செயலர் மிச்செல் டோனலன், "பாரம்பரியம் மற்றும் நவீனம், கலாசாரம் மற்றும் சமூகம் ஆகியவற்றின் கலவையை நமது நாட்டை சிறப்பிக்கும் வகையில் கொண்டாட வார இறுதி நிகழ்வுகள் மக்களை ஒன்றிணைக்கும்" என்றார்.

செப்ரெம்பரில் ராணியின் இறுதிச் சடங்கைப் போலவே முடிசூட்டுக்கான ஏற்பாடுகளும் இராஜதந்திர ரீதியாக உணர்திறன் கொண்டதாக இருக்கும், உலகத் தலைவர்கள் உலகம் முழுவதிலுமிருந்து வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஹாரியும் மேகனும் கலந்து கொள்வார்களா என்ற கேள்வி பரவலாக எழுந்துள்ளது.



# குடி குடும்பத்தைச் சீரழிக்கிறது





“குடி குடியைக் கெடுக்கும்” என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், குடி ஒரு குடியை மட்டுமல்ல ஒரு சமூகத்தையே கெடுக்கக் கூடிய தன்மை கொண்டது. எல்லா சமூகத்திலும் மதுவின் பாவனையும் அதன் பாதிப்புகளும் இருக்கவே செய்கின்றன. என்றாலும் மலையகத்தில் காணப்படுகின்ற மதுபானக் கடைகளின் அளவு மட்டும் அல்ல, அதன் விற்பனை அளவும் தினந்தோறும் பெருகிய வண்ணமே உள்ளன.

மலையகத்தைப் பொறுத்தவரையில், பெரும்பாலும் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்து வாழ்க்கை நடத்தும் மக்களே மிக அதிகம். ஒவ்வொரு நாளும் மழை, வெயில் என்று அட்டைக் கடிகளும் பாம்பு கடிகளும் குளவிக் கடிகளும் ஓயாது துரத்தும் போதிலும் ஓய்ந்து போகாத கரங்களால் உழைத்து வாழுகின்ற மலையக மக்களின் உழைப்பு எல்லாமே வாழ்க்கைக்கு முழுமையாக வந்து சேர்கிறதா? என்ற கேள்வி எத்தனை பேருக்கு எழுந்திருக்கிறது?

நாள் முழுவதும் உழைத்தாலும் உழைப்பிற்கேற்ற ஊதியத்தைத் தருவதற்குப் பதிலாக துயரத்தை தருகின்ற தொழில் சுரண்டலுக்கு மத்தியில், அவர்கள் சுரண்டியது போக எஞ்சியது வீடு வந்து சேரும் என்று ஒவ்வொரு மாதமும் பத்தாம் திகதி வீடுகளில் விளக்கு ஒளியைப் பார்த்து, இன்னமும் காத்திருக்கும் தாய்மார்களின் கண்களின் எதிர்பார்ப்பையும் எப்போது தீரும் இந்த நிலை? என்று அவர்களின் வாழ்க்கை வலியை கண்ணீராய் வெளிப்படுத்தும் போதும் அதை உணர்ந்து வாழ்க்கை நடத்தும் குடும்பத் தலைவர்களை மலையகத்தில் எண்ணி எடுக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது.

அந்த அளவிற்கு குடும்பத்தைவிட மதுவை நாடும் குடும்பத் தலைவர்கள் பொறுப்பற்று இருக்கிறார்கள். இலங்கையில் அதிக மது விற்பனையாவது மலையக பிரதேசங்களில் தான். அதில் சில மது விற்பனை நிலையங்கள் அரச அனுமதியின் கீழ் இயங்குகிறது. பல அரசு அனுமதி இன்றி இயங்குகிறது. கள் தவறணைகளால் காணாமல் போன குடும்பங்களின் எதிர்காலம் அதிகமாகவே இருக்கிறது.

பலரிடம் நான் கேட்டபோது “குடி தனி மனித சுதந்திரம்” என்று சொன்னார்கள். எது அவசியம்? எது அநாவசியம்? என்று தெரிந்து கொள்ளும் அளவிற்குக்கூட இவர்கள் இல்லையே! அந்த அளவிற்கு குடி ஒரு மனிதனை யோசிக்க வைக்கிறது. என்ற எண்ணம் தான் ஓடிக்கொண்டிருக்கிறது.

இன்று ஒவ்வொரு நாளும் மதுபான கடையில் நிற்கும் குடும்பத் தலைவர்களின் வீடுகளில் மூன்று நேர உணவு இருக்கிறதா? ஒரு மாதம் முழுவதும் அவர்களால் முழுமையாக உணவு உண்ணக்கூடிய வசதி இருக்கிறதா? இப்போது மார்கழி மாதம் என்பதால், மழைக்காலம் எனவே, லயன் வீடுகளில் கூரைகள் செம்மைப்படுத்தப்படாமல் இருப்பதே பெரும்பாலும் வழக்கம். குடும்பத் தலைவர்கள் மதுபானக் கடைகளில் நிற்கும் போது, தொடர்ந்து பெய்கின்ற மழையால், வீட்டுக் கூரைகளில் இருந்து வீட்டுக்குள் வழிகின்ற தண்ணீரைக் குறைக்க என்ன வழி இருக்கிறது? என்று எத்தனை குடும்பத் தலைவர்கள் யோசிக்கிறார்கள்?

ஒவ்வொரு தனி மனிதனும் குடிப்பது சுதந்திரம் என்பதைக் கையில் எடுக்கையில், முதலில் தனி மனிதன் பாதிக்கப்படுகிறான். அந்த தனி மனித பாதிப்பால் எத்தனை பிரச்சினைகள் குடும்பங்களில் ஏற்படுகிறது? அதிகரித்த குடியால் மதி இழந்து வீடு வந்து சேரும் போது, வீட்டில் சமைப்பதற்கு உணவுப் பொருட்கள் இல்லாமல், சாப்பிடாமல் இருக்கும் பிள்ளைகளைப் பற்றிய எண்ணம் சிறிதும் இன்றி, ஏன் சமைக்கவில்லை என்ற சண்டை மனைவியுடன் வருகிறது. இது எல்லோர் வீட்டிலும் நடப்பது தானே? என்று சாதாரணமாக நினைக்காதீர்கள். ஒவ்வொரு நாளும் இதே பிரச்சினை வரும்போது, மனைவியின் மனநிலை என்ன? பிள்ளைகளின் எதிர்காலம் என்ன? என்று சிந்திக்க வேண்டியுள்ளது.

ஒவ்வொருநாளும் குடித்து உடல்நிலை கெட்ட பின்னர், அதற்காக ஏற்படும் வைத்தியச் செலவுகள் பன்மடங்கு அதிகமாகும். மலையகப் பிரதேசங்களைப் பொறுத்தவரையில், சிறந்த வைத்திய வசதியைப் பெறுவதற்குக்கூட பல மணித்தியாலயப் பேரூந்துப் பயணம் தேவைப்படுகிறது. அத்தகைய சூழ்நிலையில் குடும்பத்தலைவனின் உடல் நிலையை சீரமைக்கும் பேரூந்துக் கட்டணங்களையோ, வைத்திய செலவுகளையோ ஈடு செய்யும் அளவிற்கு ஒவ்வொரு குடும்பமும் வாழ்கிறதா? என்பது கேள்விக் குறியே!

ஒரு தனி மனிதனின் செயலால் குடும்பம் பாதிக்கப்படுகிறது. மனைவி பிள்ளைகளை பாதுகாக்கும் சூழல் இல்லாமல் போகிறது. பெரும்பாலான குடும்பங்களில் தந்தையுடன் பேசுவதை விரும்பாத பிள்ளைகள் இன்னமும் வாழ்கிறார்கள். குடும்பத் தலைவனின் செயற்பாடுகளால் சாதாரண கல்வியைக்கூட நிறைவாக பூர்த்தி செய்யாமல், பாடசாலை இடைவிலகல்கள் மட்டுமல்ல சிறுவர் தொழிலாளர்களும் இன்னமும் மலையகத்தில் உருவாகிக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

பெரும்பாலும், மலையகத்தில் காணப்படுகின்ற மதுபாவனையால் பல மாணவர்களின் கல்வி நடவடிக்கையை முன்னெடுக்க முடியாமல் பொருளாதாரப் பிரச்சினைகள் ஏற்படும் அதேவேளை, அவர்கள் உளவியல் பாதிப்புக்கும் உட்படுகின்றனர். மலையகத்தில் இந்நிலை தொடர்ந்து செல்கின்றபோது, எதிர்காலத்தில் ஒரு கல்விச்சமூகம் உருவாவதற்கு மது மாபெரும் தடையாக அமைகிறது எனலாம்.

பல குடும்பங்களில் தந்தைமார்கள் தங்கள் பிள்ளைகளை கடைகளுக்கு சிகரெட் வாங்க அனுப்பும் பழக்கம் இன்றும் உள்ளது. இந்தச் செயற்பாடு பிள்ளைகளையும் சிகரெட் பாவனைக்கு உட்படுத்தும் பழக்கத்தைத் தூண்ட வழிவகுக்கும்.

இவ்வாறு, குடும்பத் தலைவரின் செயற்பாடுகளால் குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகளால் பல இளைஞர் யுவதிகள் சிறுவயதிலேயே வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள். அது அவர்கள் விரும்பியோ விரும்பாமலோ நடக்கிறது எனலாம். சில பிள்ளைகள் வலுக்கட்டாயமாக குடும்ப சூழ்நிலை காரணமாக வீட்டு வேலைகளுக்கு அனுப்பப்படுவது இன்றும் மறைமுகமாக மலையகத்தில் தொடரும் செயல்பாடுதான். அதே சமயத்தில், இன்றும் சிலர் சாதாரண கல்வியை நிறைவு செய்தவுடன், குடும்பப் பொருளாதார நிலையை கருத்தில் கொண்டு, குடும்பப் பொறுப்புக்களை சுமந்து பெருநகரப் பகுதிகளுக்கு வேலைக்கு செல்லும் நிலைமையும் உள்ளது.



பா.கனகேஸ்வரி
ஊடக கற்கைகள் துறை
யாழ்.பல்கலைக்கழகம்

இத்தகைய நிலைமைகளில், வேலைக்குச் செல்லும் பலர் “நாகரிகம்” என்ற பெயரில் செய்யும் பல செயற்பாடுகள் சமூகத்திற்குப் பாதிப்பாக அமைவதுடன் தனிப்பட்ட நபரின் வாழ்க்கையிலும் பாதிப்பை ஏற்படுத்த காரணமாகி விடுகிறது.

மலையகத்திலிருந்து நகரப் பகுதிகளுக்கு வேலைக்கு அமர்த்தப்படும் சிறுவர் தொழிலாளிகள், பெரும்பாலும் பக்குவப்படாத வயது என்பதால் பல விதங்களில் யோசிக்கும் தன்மையற்று எந்த வேலையையும் செய்யும் நிலையில், சமூகத்தைப் பற்றிய அக்கறையற்ற நபர்களால் போதைப் பொருள் விற்பனைக்காகவும் சட்டத்திற்கு புறம்பான செயற்பாடுகளையும் செய்ய முற்படுகின்ற காரணத்தினால், சமூகத்தில் அவர்களை குற்றவாளிகளான கண்ணோட்டத்தில் பார்க்கும் நிலையும் ஏற்படுகிறது.

இவ்வாறு, ஒரு மாபெரும் சமூகப் பிரச்சினையாக எழுகின்ற மதுபாவனையின் பின்விளைவுகளை யோசித்துப் பார்ப்பவர்கள் மிகக் குறைவாகவே காணப்படுவதால்தான், மலையகத்தில் இன்றளவும் மதுபாவனை நாளுக்கு நாள் அதிகரித்து செல்கிறது.

இந்த மதுவைப் பெற்றுக்கொள்ள பெரும்பாலான நாட்களில் பணத் தட்டுப்பாடு எழும்போது, பல குடும்பத் தலைவர்கள் அதைக் கையாளும் வழி மிக வித்தியாசமானதாகவே இருக்கிறது. மாதச் சம்பளத்தை ஒரே நாளில் மதுபானக் கடைக்கு சற்று வருத்தமே இல்லாமல் முற்றிலும் குடித்து விட்டு, மறு நாளில் இருந்து பணத்திற்காக வீடுகளில் எழுகின்ற போராட்டங்கள் இப்போதும் இருக்கிறது.

எங்கேயாவது “பணம்” என்ற காகிதத்தாளை வட்டிக்கு கொடுப்பார்கள் அதை “சம்பளத்துக்கு தருகிறேன்” என்று கடன் சொல்லி, வட்டிக்கு தினமும் மாதம் முழுவதும் குடித்து விட்டு, பத்தாம் திகதி அன்று மொத்த சம்பள பணத்தையும் “வட்டிக்காரன்” இடம் கொடுத்துவிட்டு, மீண்டும் அவனிடமே பணம் பெறும் வழக்கமும் தொடர்கிறது.

இவை மட்டுமல்ல, வீட்டில் உள்ள அலுமினியம், செப்பு போன்ற அண்டா, குண்டா எல்லாவற்றையும் கள் தவறணை வைத்திருப்பவனிடம் கொடுத்துவிட்டு, வயிறு நிரம்பக் குடிக்கும். சில மனிதர்களும் குடும்பத் தலைவர்களாக இருக்கவே செய்கிறார்கள்.

மனைவியின் தாலி முதல் கொண்டு, பிள்ளைகளின் புத்தகமும் மதுக்கடைக்குச் செல்லும் வழக்கம் இப்போதும் உள்ளது. இவற்றைப் பார்க்கும்போது, பலருக்கு இது உண்மையா? என்ற கேள்வி எழலாம் ஆனால், சமூகத்திற்குள் இருந்து அதைப் பார்த்த பெரும்பாலானோருக்குத் தெரியும். இன்னமும் மலையகத்தில் இரவு நேரங்களில், பெரும்பாலான அம்மாக்களும் பிள்ளைகளும் கண்ணீரோடு உறங்கும் கதை.

எப்போது மாறும் இவை? என்று எல்லோரும் கேட்டுக் கொண்டே இருக்கிறோம். வெறும் கேள்வியாக மட்டுமே. மது தொடர்பான சரியான விழிப்புணர்வு இதுவரையில், முறையாக வழங்கப்படாத பல கிராமங்கள் இருக்கவே செய்கின்றன.

சீரான செயல் திட்டங்களை எல்லா இடங்களுக்கும் கொண்டு சேர்க்க வேண்டும். ஒவ்வொரு பிரதேசங்களிலும் காணப்படுகின்ற இளைஞர் கழகங்களால், நிச்சயமாக குறித்த சமூகத்தை மாற்ற முடியும். ஒவ்வொரு சமூகத்திலும் மதுபோதையால் ஏற்படுகின்ற பிரச்சினைகளையும் அதன் பாதிப்புகளையும் தெளிவாக வலியுறுத்தி சுட்டிக் காட்டுவதன் மூலம், ஒரு எதிர்கால சமூகமே பாதுகாக்கப்படும் என்பதை ஒவ்வொருவரும் உணரும் போதே, மதுபாவனை அற்ற ஒரு மலையக சமூகத்தை உருவாக்கவும் சீரமைக்கவும் முடியும். ■

# கலங்காதே



தோல்வியிலும்
கோபத்திலும்
வீணாக கண்ணீர் சிந்தாதே

தோல்வி உனக்கானது
அதை நீ ஏற்றுக்கொண்டால்
தான் வாழ்வில்
வெற்றிபெறலாம்

கோபம் என்பது கண்ணீர்
சிந்த வேண்டிய நேரம்
அல்ல
அடுத்த அடியை எடுத்து
வைக்கும் நேரம்

✍ நிந்துசா

# ஒற்றுமைத் தமிழ்



சிந்தை தாண்டி சந்தம் வழி
சத்தம் இன்றி
உண்மை சொல்ல

வந்து போகும் தமிழின் சிறு
சொல்லும் ஏனோ
பிறமொழி சேர

கூட்டு வாழ்வு
ஒற்றுமைப் பேச்சு
எல்லாம் வந்து
தமிழை மாற்றும்

தெரிந்து தெளிய
நேரம் கடந்து
தமிழும் மாறி
மாண்டு போகாதோ?
நிறத்தை தமிழ்
வழி ஒரு சொல்

கொண்டு சொல்ல
ஆகாதோ உம் மனம்

அன்பே கேள்
உள்ளம் நொந்து
உன்னிடம் சொல்ல
இன்றைய தமிழ்

✍ நதுநசி

# பட்டாம் பூச்சி

பட்டு பட்டு என்று சின்னஞ்சிறிய
சிறகடிக்கும் பட்டாம் பூச்சி

உன் மெல்லிய சிறகில்
பல நிறங்களை தூவியது

யாரோ அதை அறிய ஆர்வம்
அறிந்தால் நானும் பூசிக்
கொள்வேன்

சின்னஞ்சிறிய காலால்
மென்மையான பூவிதழில்
இருந்து ரசித்து மதுவுண்டு
மயங்கிக் கிடப்பது தனி சுகம்

உந்தன் வாழ்க்கை வட்டத்தில்
இப்பகுதி

இரசிப்பதற்கு மகிழ்ச்சி
கொடுத்தாலும்

நீ மயிர்கொட்டியான பின்
உன்னருகில் வரவே மனிதன்

அஞ்சுகின்றான்

எனவே உலகில்
அழகானதுக்குள்
ஆபத்தும் உண்டு



✍ சனா

# மயில் கண்ணழகி

கண்ணிற்கு கருமணி அழகு
மண்ணிற்கு சிறுமணல் அழகு
கவிதைக்கு தனித்தமிழ் அழகு
குழந்தைக்கு குறும்புத்தனம்
அழகு

எறும்பிற்கு அதன் ஒழுங்கு அழகு
எழுத்தாளனிற்கு எழுதிய
ஏட்டின் தொகை அழகு
மருத்துவரிற்கு நோயைத்
தீர்க்கும் அறிவு அழகு

மன்னனிற்கு ஆளும் அதிகாரம்
அழகு
மண்ணிற்கு அது தரும்
விளைச்சல் அழகு
மாணாக்கனிற்கு கற்கும் கல்வி
அழகு

ஆசானிற்கு அறிவை விளக்கும்
வித்தை அழகு
பாடகனிற்கு குரலின் தரம் அழகு
இயக்குநர்க்கு திரைக்கதையின்
கருத்து அழகு
படைப்பாளர்க்கு படைப்பின்
நிலைப்பு அழகு

கல்விமானிற்கு கல்வியால்
வாழ்வை வடிக்கும் கலை அழகு
பூவிற்கு அதன் பூவிதழ் அழகு
நாவிற்கு அதன் சொல் அழகு

நதியிற்கு அது செல்லும்
பாதை அழகு
மதியிற்கு அது செய்யும்
செயல் அழகு

கவிஞனிற்கு கரையில்லாத
கவித்துவம் அழகு
பாவிற்கு அதன் மொழி அழகு
பாவையே! உனக்குந்தன் மயில்
கண் ஓர் தனி அழகு

✍ லக்சன்



# சதையுண்ணும் மனிதர்கள்



களங்கம் இல்லா நிலவினை
போலே
முழுமுகம் காட்டி சிரிக்கும்
குழந்தை
அழுதிட இழிசெயல் செய்யும்
மனிதரே
மானிடன் என்றே மமதை
கொண்டு
அலைந்ததை ஆணவம்
கொண்டே அழுகிறாய்

ஒருதாய் வயிற்றில் பிறந்தவன்
தானே
அவளுக்கு நீயொரு களங்கம்
ஆனாய்
இன்னொரு தாய் பெற்ற
குழந்தையை
வன்புணர்வு செய்ய
எப்படி முனைந்தாய்?

அரும்புகள் துரும்புகள் ஆகியே
வீழ்வதும்
மொட்டுகள் பட்டுப்போய்
பாதியில் காய்வதும்
உந்தன் மனதின் பேய் செய்யும்
கொடிதினும் கொடிய காரியம்
ஆகும்

சின்னஞ்சிறிய சிறுமிகள் அழுது
உந்தன் வெறிதனில் பயந்தே
கலங்கி
வெளிறிய பார்வையில் பயந்தே
அழுவதும்
வேண்டாம் கடவுளே!

இது என்ன கொடுமை
இதற்கு மேலும் இதனைக் கண்டு
நானிங்கு வாழ்தல் அரிதினும்
அரிது
எந்தன் உயிரை எடுத்துச்
சென்றிடு
அல்லால் அந்த காமுகர்
உயிரை

பறித்துச் சென்றிடு திரும்பவும்
அவரை
உலகினில் படைத்து மனிதரை
மீண்டும்

புலம்பிட வைக்க முயன்றிடல்
வேண்டாம்
இனியிந்த உலகம்
இனிமையாய் இருக்கட்டும்

✍ வி.அபிவர்ணா
முல்லைத்தீவு

# வடக்கின் ஓர் அடையாளம்

# வடகடல் உப்பு ஆலை




**கருவாடு உப்பு
பெற்றுக்கொள்ள
தொடர்புகளுக்கு
0777133543
0767833799**








ரசிகர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்ற இந்தப் படம் தற்போது ஒஸ்கார் போட்டியிலும் களமிறங்கி

# ஒஸ்கார் போட்டியில் மூன்று இந்தியப் படங்கள்

**2023** ஆம் ஆண்டுக்கான 95 ஆவது ஒஸ்கார் விருதுகளுக்கான இறுதிப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் ராஜமௌலி இயக்கத்தில் வெளியான 'ஆர்ஆர்ஆர்' திரைப்படத்தில் உள்ள "நாட்டு, நாட்டு" சிறந்த பாடல் பிரிவில் இடம் பிடித்துள்ளது.

95 ஆவது ஒஸ்கார் விருதுக்கான அதிகாரபூர்வ இறுதிப் பட்டியல், அகாடமி ஆஃப் மோஷன் பிக்சர் ஆர்ட்ஸ் அண்ட் சயின்சஸ் மூலம் அறிவிக்கப்பட்டது. இந் நிகழ்ச்சியை ரிஸ் அகமது, அலிசன் வில்லியம்ஸ் ஆகியோர் தொகுத்து வழங்கினர். இதில் ராஜமௌலி இயக்கிய 'ஆர்ஆர்ஆர்' ஒரு பிரிவில் தேர்வாகியுள்ளது. சிறந்த யுள்ளது. ஹிடன் லெட்டர்ஸ், சில்ட்ரன் ஆஃப் தி மிஸ்ட், ஃபயர் ஆஃப் லவ் போன்ற ஆவணப்படங்களுடன் ஆல் தட் ப்ரீத்ஸ் ஒஸ்கார் போட்டியில் பங்கேற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

சிறந்த ஆவண குறும்படம் பிரிவில் 'தி எலிஃபண்ட் விஸ்பரர்ஸ்' (The Elephant Whisperers) என்ற படம் தேர்வாகியுள்ளது. கார்த்திகி கோன்சால்வ்ஸ் இயக்கிய ஆவணப்படமான இதில், கைவிடப்பட்ட இரண்டு யானைகளும் அதனைப் பாதுகாக்கும் காவலர்களுக்கும் இடையே எவ்வாறு பிரிக்க முடியாத பிணைப்பு உருவாகிறது என்பதை பின்னணியாக வைத்து உருவாகியுள்ளது. இது குறித்து மகிழ்ச்சி தெரிவித்துள்ள




வெளிநாட்டு திரைப்படம், சிறந்த நடிகர் உள்ளிட்ட பல பிரிவுகளில் போட்டியிட்ட நிலையில், 'ஆர் ஆர் ஆர்' படத்தின் 'நாட்டு நாட்டு' பாடல் சிறந்த பாடல் பிரிவில் தேர்வாகியுள்ளது. இதனால் 'ஆர் ஆர் ஆர்' படக் குழுவினர் உற்சாகத்தில் உள்ளனர்.

ஒஸ்கார் இறுதிப் போட்டியில் 'ஆல் தட் ப்ரீத்ஸ்' (All that Breathes) இடம்பெற்றுள்ளது. ஷௌனக் சென் இயக்கியுள்ள இந்த ஆவணப் படம் நதீம், சவுத் என்ற இரு சகோதரர்களின் வாழ்க்கையை பின்னணியாக வைத்து உருவாகியுள்ளது. அவர்கள் இருவரும் டெல்லியில் உள்ள ஒரு தற்காலிக மருத்துவமனையில் பறவைகளைப் பராமரிப்பதில் தங்கள் நேரத்தை செலவிடுகிறார்கள்.

தயாரிப்பாளர் குனீத் மோங்கா, அனைவருக்கும் நன்றி கூறியுள்ளார். இந்தப் படத்துக்கும் ஒஸ்கார் விருது கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியா சார்பில் ஒஸ்காருக்கு அனுப்பப்பட்ட செல்லோ ஷோ திரைப்படம் இறுதிப் பட்டியலில் இருந்து வெளியேறியது. குஜராத்தி மொழியில் எடுக்கப்பட்ட செல்லோ ஷோ நடிப்பு, ஒளிப்பதிவு இயக்கம் ஆகியவற்றிற்காக இறுதிப் பட்டியலில் இடம் பெறலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

பான் நளின் இயக்கிய இந்தப் படம் ஆஸ்கர் போட்டியில் இருந்து வெளியேறியுள்ளது குறிப்பிடத்தக்கது. ■

(06 ஆம் பக்கத்தொடர்ச்சி...)

உள்ளிட்ட முக்கியமான அதிகாரப் பரவலாக்கல்களை சிங்கள ஆட்சியாளர்கள் கொழும்பை மையப்படுத்திய இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்புக்குள் மீண்டும் கொண்டு சென்றுள்ளனர். இது இந்தியாவுக்கும் உலகத்துக்கும் தெரியாததல்ல.

தமிழ்த்தேசியக் கட்சிகளுக்கும் அது புரியாததல்ல. ஆனால், பதின்மூன்றை வைத்துக் கொண்டுதான் இந்தியா தனக்குரிய அரசியல் - பொருளாதார இலாபங்களை இதுவரை சம்பாதித்து வந்தது.

ரிக்கத் தூதுவர் ஜூலி சங், அனைத்துக் கடன் வழங்குனர்களும் இதற்கு இணங்கும் பட்சத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதில் இலங்கைக்கு அமெரிக்காவும் முழுமையாக ஒத்துழைப்பு வழங்கத்தயார் என்று டுவிட்டரில் கூறியிருக்கிறார்.

'பாரிஸ் கிளப்' நாடுகளுடன் ஒருங்கிணைந்து உரியவரானதும் வெளிப்படைத்தன்மை வாய்ந்ததுமான கடன் சலுகைகளை வழங்குவதாகவும் இந்தியா அறிவித்துள்ளமை

# டில்லி கொழும்பைக் கையாளுகின்றதா? கொழும்பு டில்லியை ஏமாற்றுகின்றதா?

இருந்தாலும் ஜெய்சங்கர் வியாழக்கிழமை கொழும்புக்குப் பயணம் செய்து ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதில் இருந்து, பதின்மூன்றை இந்தியா இலங்கையிடமே பொறுப்புக் கொடுத்திருக்கிறது. அதாவது, பதின்மூன்றை இலங்கை நடைமுறைப்படுத்தினால் என்ன, கைவிட்டால் என்ன என்பதே அதன் அர்த்தம்.

பதின்மூன்றை விட மேலதிகமான அரசியல் அதிகாரப் பங்கீட்டை ஈழத்தமிழர்களுக்கு வழங்க இந்தியாவுக்குச் சுத்தமாக விருப்பமில்லை. 1983 இல் இருந்து இந்தியாவின் நிலைப்பாடும் இதுதான். ஆகவேதான் 2009 இற்குப் பின்னர் பதின்மூன்றும் தேவையில்லை என்ற சிங்கள ஆட்சியாளர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதன் ஊடாக இலங்கையில் தமது நோக்கத்தை வெற்றிகொள்ளலாம் என்ற எண்ணக் கரு இந்தியாவிடம் ஆழமாக வேரூன்றியுள்ளது.

அதேநேரம் ரஷ்ய - உக்ரைன் போர்ச் சூழல் ரஷ்யாவுக்கு இந்தியா வழங்கும் ஆதரவினால் அமெரிக்காவுடன் ஏற்பட்டுள்ள பனிப்போருக்கும் குறைந்த பட்சம் ஜெய்சங்கரின் கொழும்புப் பயணம் ஓரளவு தீர்வு கண்டிருக்கின்றது என்ற அவதானிப்பும் உண்டு.

கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக பாகிஸ்தான், இலங்கை போன்ற நாடுகளை அமெரிக்கா நேரடியாகக் கையாண்டிருக்கின்றது. அதுவும் பாகிஸ்தான் அரசுடன் நேரடியான உறவுகளைப் பேணி பாகிஸ்தான் கடற்படையைப் பலப்படுத்தி இந்தியாவுக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுத்து வந்தது.

இதன் பின்னணயில் இலங்கையை இந்தியா அவசரமாகக் கையாண்ட இந்தியா, சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்குரிய தீர்வுகளை ஏற்படுத்தத் தனது சக்திக்கு அப்பாற்பட்டு இணங்கியிருப்பதை அமெரிக்கா பாராட்டியுள்ளது.

கடன் மறுசீரமைப்புக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக இந்தியா அறிவித்துள்ளமையை வரவேற்றுள்ள கொழும்பில் உள்ள அமெ மகிழ்ச்சியளிப்பதாக அமெரிக்கத் தூதுவர் புகழ்ந்துள்ளார்.

அமெரிக்க - இந்திய அரசுகளிடையே பனிப்போர் இருந்தாலும் ஈழத்தமிழர்களின் விவகாரத்தில் அமெரிக்கா இந்தியாவுடன் சேர்ந்தே செயற்பட்டிருக்கின்றது.

இதனால், இந்தியாவைக் கடந்து அமெரிக்காவுடன் நேரடியான உறவைப் பேண வேண்டும் என்று விரும்பித் தன்னால் இயன்ற இராஜதந்திர உத்திகளைக் கையாண்ட இலங்கைக்குக் குறிப்பாக ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்தியா பாடம் புகட்டியதாகச் சில இந்திய ஆங்கில ஊடகங்கள் பாராட்டும் நிலை வரலாம்.

ஆனால், ஈழத்தமிழர் விவகாரத்தை இலங்கையின் விருப்பங்களுக்கு ஏற்ப ஏலம் விட்டுச் சிங்கள ஆட்சியாளர்களைத் தங்கள் கட்டுப்பாட்டில் இந்தியா கொண்டு வரும் முயற்சியை எடுத்திருக்கிறது என்றே கருத இடமுண்டு.

இருந்தாலும் ஈழத்தமிழர் விவகாரத்தில் இந்தியா இனிமேல் தலையிடாது, அழுத்தம் கொடுக்காது என்பதை மேலும் சில மாதங்கள் காத்திருந்து நன்கு உறுதிப்படுத்திய பின்னர், இலங்கையில் இந்தியாவுக்கான ஆதரவுத் தளத்தையும் சிங்கள ஆட்சியாளர்கள் புறம்தள்ளும் காலம் இல்லாமலில்லை.

ஏற்கெனவே அதற்குரிய பட்டறிவு இந்தியாவுக்கு உண்டு. இலங்கையின் அரசியல் ஏமாற்றுக்கள் உலகத்துக்கும் தெரியும்.

ஆகவே ஜெய்சங்கரின் கொழும்புப் பயணத்தில் வடக்குக் கிழக்குக்கு முழுமையான அரசியல் அதிகாரப் பங்கீட்டை வழங்குவது பற்றிய பேச்சு எடுக்கப்படவேயில்லை.

மாறாக வடக்குக் கிழக்குப் பிரதேசத்துக்கும் மலையகத் தமிழர்களுக்கும் இந்தியா உதவி செய்யும் என்று பொதுக் கண்ணோட்டத்தில் கருத்துக் கூறிவிட்டு ஜெய்சங்கர் சென்றிருக்கின்றமை, பிராந்தியத்தில் இந்திய நலன்களுக்கு உகந்ததல்ல. ■

(முதலாம் பக்கத்தொடர்ச்சி...)




தமிழ் அரசுக் கட்சியுடன் இணைந்து அரசியல் செய்தவர்கள் இன்று அதற்கு எதிராகக் களம் இறங்கி உள்ளனர். முன்னாள் முதலமைச்சர் சி.விக்னேஸ்வரன், சைக்கிளில் ஓடித்திரிந்த மணிவண்ணன் ஆகிய இருவரும் கடைசி நேரத்தில் இந்தக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறி விட்டனர்.

தமிழ் அரசுக் கட்சியின் முதுகில் ஏனைய கட்சிகள் சவாரி செய்தனவா? அல்லது ஏனைய கட்சிகளின் ஆதரவில் தமிழ் அரசுக் கட்சியின் உறுப்பினர்கள் வெற்றி பெற்றார்களா? என்பதை உள்ளூராட்சிசபைத் தேர்தலின் முடிவு தெளிவுபடுத்திவிடும். தமிழ் அரசுக் கட்சியின் சின்னம் வீடு. புதிய கூட்டமைப்பின் சின்னம் குத்துவிளக்கு. வீட்டுக்குள் இருக்க வேண்டிய குத்துவிளக்கை வீதிக்குக் கொண்டு வந்து விட்டார்கள்.

அரசியலில் நிரந்தர எதிரியும் இல்லை. நிரந்தர நண்பனும் இல்லை என்பதை இவர்கள் உறுதிப்படுத்துகிறார்கள்.

புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், ஜனநாயகப் போராளிகள், தமிழ்த் தேசியக் கட்சி ஆகியன இணைந்து ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் புதிய கட்சி உருவாகி உள்ளது. ரெலோவும் புளொட்டும் புதிய கட்சிகளுடன் கூட்டணி அமைத்துள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறிய ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியும் இவர்களுடன் இணைந்துள்ளது. வடக்கு, கிழக்கில் இரண்டு கூட்டமைப்புக்கும் இடையில்தான் போட்டி இருக்கப் போகிறது. கிழக்கு மாகாணத்தில் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு எதிர்பார்க்கும் வெற்றி கிடைக்காது. கிழக்கில் சிங்கள, முஸ்லிம் வாக்குகள் அதிகளவில் இருப்பதால் போட்டி பலமாக இருக்கும்.



ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி என்னும் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட கட்சி. தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றான போது புளொட்,ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியில் இருந்து வெளியேறிய சுகு அணி ஆகிய இரண்டும் இணைந்து உருவாக்கிய கட்சி. அக் கட்சியில் இன்று ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியும் இணைந்துள்ளது.

நடைபெறப் போவது உள்ளூராட்சி சபைத் தேர்தல். வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் ஆதரவு யாருக்கு என்பதை வெளிப்படுத்தும் தேர்தலாக மாறப்போகிறது. ஊரில் உள்ள செல்வாக்கு மிக்க ஒருவரைத் தேர்வு செய்யும் தேர்தல். இந்தத் தேர்தலின் முடிவை வைத்துக் கொண்டு மாகாண சபைத் தேர்தலையோ அல்லது பாராளுமன்றத் தேர்தலையோ கணிக்கமுடியாது.

வாக்குகள் சிதறடிக்கப்படுவதால் அறுதிப் பெரும்பான்மை கிடைப்பது சந்தேகம். யார் ஆட்சி அமைத்தாலும் பாதீட்டைத் தோற்கடிப்பதில் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைவது கடந்த கால வரலாறு. எந்தக் கட்சி வெற்றி பெற்றாலும் தோற்கப்போவது தமிழ் மக்கள் என்பதை அரசியல் வாதிகள் இன்னமும் உணரவில்லை. ■

# மதில்மேல் பூனையாக.....

( 04 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இதனிடையில் தேர்தல் செலவீனங்களுக்குரிய நிதியை ஒதுக்க முடியாத நிலை இருப்பதாக அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்ற சூழலில், வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்டு பிரச்சார நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் தேர்தல் அலுவலகங்களுக்குத் தேவையான ஆரம்ப நிதிகூட வழங்கப்படவில்லை என்றும் இதனால் சுறுசுறுப்பும் பரபரப்பும் அமைந்திருக்க வேண்டிய அந்த அலுவலகங்கள் மந்த கதியில் இயங்கிக் கொண்டிருப்பதாகவும் எதிர்க்கட்சியினர் சுட்டிக் காட்டியிருக்கின்றனர்.

இந்த நிலைமைகள் ஒரு புறமிருக்க, மறுபுறத்தில் தேர்தலை நடத்த முடியுமா? என்ற சந்தேகத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் இரண்டு நிலைமைகள் உருவாகியிருக்கின்றன. தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனக்கோரி நீதிமன்றத்தில் இரண்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற அதேவேளை, நாடு இப்போதுள்ள நிலையில் இந்தத் தேர்தல் நடத்தப்படக் கூடாது எனக் கோரி முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளார். ஏட்டிக்குப் போட்டியான இரு தரப்பு மனுக்களையும் விசாரணைக்கு எடுத்துள்ள நீதிமன்றம் எத்தகைய நிலைப்பாட்டை வெளிப்படுத்தப் போகின்றது என்பது அரசியல் களத்தில் மிக முக்கியத்துவம் பெற்றிருக்கின்றது.

அதேவேளை, புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்று ஆட்சியமைத்ததையடுத்து, உருவாக்கப்பட்டுள்ள புதிய அரசியலமைப்புப் பேரவையின் முதலாவது கூட்டத்தில் சுயாதீன ஆணைக்குழுக்களுக்குப் புதிய உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அதற்கான விண்ணப்பங்களைக் கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. அந்த வகையில் சுயாதீன ஆணைக்குழுக்களில் ஒன்றாகிய தேர்தல் ஆணைக்குழுவுக்கும் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படலாம் என்ற நிலைமை உருவாகியிருக்கின்றது.

இதனை கோடி காட்டும் வகையில் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களில் ஒருவராகிய திருமதி பி.எம்.எஸ்.சாள்ஸ் தனது உறுப்புரிமையைத் துறந்து ஆணைக்குழுவில் இருந்து வெளியேறியிருக்கின்றார். அதேபோன்று ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் அனைவரினதும் ஏகோபித்த முடிவில்லாத நிலையிலேயே தேர்தலுக்கான திகதியைத் தீர்மானித்ததாக சர்ச்சைக்கு உள்ளாகியிருக்கின்ற தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமால் புஞ்சிஹேவாவும் தனது பதவியைத் துறந்து செல்லலாம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாறு பல்வேறு இழுபறி நிலைமைகளினால் இந்த உள்ளூராட்சித் தேர்தல் ஆணைக்குழு திட்டமிட்டவாறு நடைபெறுமா? நடைபெறமாட்டாதா? என்ற கேள்வி அரசியல் களத்திலும் மக்கள் மனங்களிலும் மேலோங்கியிருக்கின்றது. மொத்தத்தில் தேர்தலுக்குரிய செயற்பாடுகள் இரண்டும் கெட்ட நிலையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்ற தருணத்தில் இந்தத் தேர்தலானது மதில் மேல் ஏறியிருக்கின்ற பூனையாகவே தோற்றம் தருகின்றது. ■

தீம்புனல் THEEMPUNAL




# 3 வருடங்களின் பின்னர் 30 ஆவது சதம்

இந்தியா - நியூஸ்லாந்து அணிகளுக்கிடையே இந்தோரில் நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் போட்டியில் 83 பந்துகளில் சதத்தை எட்டியதன் மூலம், ஒருநாள் கிரிக்கெட்டில் தனது இரண்டாவது அதிவேக சதத்தை ரோகித் சர்மா செய்தார். இந்திய அணியில் தொடக்க வீரர்களான கப்டன் ரோகித் - கில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இந்த ஜோடி 20212 0 ஓட்டங்கள் எடுத்தனர். மேலும், இரு வருமே சதம் விளாசி மிரட்டினர். ரோகித் 101 ஓட்டங்களிலும் கில் 112 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

இந்தப் போட்டியில் தனது தரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்திய கப்டன் ரோகித் சர்மா மூன்று வருடங்களின் பின்னர்சதம் அடித்து மிரட்டினார் ரோகித் கடைசியாக 2020 ஆம் ஆண்டு ஜனவரி 19 ஆம் திகதி பெங்களூரில் உள்ள எம்.சின்னசாமி ஸ்ரேடியத்தில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக ஒருநாள் போட்டியில் சதம் அடித்திருந்தார். அதன்பின்னர் தற்போது தான் அவர் 3 ஆண்டுகளுக்குப்பிறகு தனது 30 ஆவது ஒருநாள் சதத்தை விளாசி இருக்கிறார்.

இந்த அபார சதம் மூலம் ரோகித், அவுஸ்திரேலியாவின் முன்னாள் கப்டன் ரிக்கி பொண்டிங்கின் மூன்றாவது அதிக சதங்களை சமன் செய்தார். மேலும், தொடக்க ஆட்டக்காரராக ஒருநாள் கிரிக்கெட்டில் இரண்டாவது அதிக சதங்கள் அடித்த சனத் ஜெயசூர்யாவை (28 சதம்) சமன் செய்தார்

இதே இந்தூரில் உள்ள ஹோல்கர் கிரிக்கெட் ஸ்டேடியத்தில் டிசம்பர் 2017 இல், இலங்கைக்கு எதிராக வெறும் 35 பந்துகளில் தனது அதிவேக ரி20 சதத்தையும் ரோஹித் பதிவு செய்தார்.ரோகித் 83 பந்துகளில் சதத்தை எட்டியதன் மூலம், ஒருநாள் கிரிக்கெட்டில் தனது இரண்டாவது அதிவேக சதத்தைப் பதிவு செய்தார். மொத்தமாக 85 பந்துகளை எதிர்கொண்டு இருந்த ரோகித் 6 சிக்ஸர்கள் 9 பவுண்டரிகளை தெறிக்க விட்டு 101 ஓட்டங்கள் குவித்து ஆட்ட மிழந்தார்.

ஒருநாள் கிரிக்கெட்டில் அதிக சதம் அடித்த வீரர்கள்.

சச்சின் டெண்டுல்கர் - 452 இன்னிங் ஸில் - 49 சதங்கள்

விராட் கோலி - 261 இன்னிங்ஸில் - 46 சதங்கள்

ரோகித் சர்மா - 30 சதங்கள் - 234 இன்னிஸில்

ரிக்கி பொண்டிங் 365 இன்னிங்ஸ்களில் - 30 சதங்கள்

சனத் ஜெயசூர்யா - 433 இன்னிங்ஸில் - 28 சதங்கள்

# மைக் டைசன் மீது பாலியல் வன்கொடுமைக் குற்றச்சாட்டு



குத்துச்சண்டை ஜாம்பவான் வீரர் அமெரிக்காவின் மைக் டைசன் (வயது 56), 1987 ஆம் ஆண்டு முதல் 1990 ஆம் ஆண்டு வரை உலக ஹெவிவெயிட் சாம்பியனாக வலம் வந்தவர். இவர் 1989 இல் முதல் மனைவியான நடிகை ராபின் கிவென்சை விவாகரத்து செய்தார். பிறகு 2 ஆவது மனைவி மோனிகா டர்னர் 2003 இல் விவாகரத்து செய்தார். தற்போது 3 ஆவது மனைவி லகிஹா ஸ்பைசருடன் வசித்து வருகிறார்.

இந்த நிலையில், 32 ஆண்டுகளுக்கு முன்பு, டைசன் பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்டார் என பெண் ஒருவர் புகார் அளித்து பரபரப்பை ஏற்படுத்தி உள்ளார். அந்தப் பெண் தாக்கல் செய்த பிரமாணப் பத்திரத்தில் திகதி எதுவும் குறிப்பிடாமல், 1990 ஆம் ஆண்டில் நடந்தது என்று மட்டும் தெரிவித்து உள்ளார். இதே கால கட்டத்தில் அழகிப் போட்டியில் கலந்து கொண்ட டிசைரீ வாஷிங்டன் என்பவரும் டைசனுக்கு எதிராக பாலியல் பலாத்கார புகார் கூறியிருந்தார். இதையடுத்து, 1992 ஆம் ஆண்டு பெப்ரவரி 10 ஆம் திகதி டைசனுக்கு எதிராக தீர்ப்பு வந்தது. அதில், அவருக்கு 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்நிலையில், தற்போது மற்றொரு பெண் அவர் மீது பாலியல் வன்கொடுமை வழக்கை பதிவு செய்து ரூ.40.82 கோடி நஷ்ட ஈடு கேட்டுள்ளார். அந்தப் பெண் அளித்துள்ள புகாரில், 'டைசனின் லிமோசின் வகை ஆடம்பர காருக்குள் அப்போது சென்றேன். உடனடியாக டைசன் என்னை நெருங்கி தொட்டார். முத்தமிட முயன்றார். நான் பல முறை வேண்டாம் எனக் கூறினேன். அதை நிறுத்திக் கொள்ளுங்கள் என மறுத்தேன். ஆனால், அவர் தொடர்ந்து என்னைத் தாக்கினார். எனது ஆடைகளை இழுத்து, களைந்து, பலாத்கார வன்முறையில் ஈடுபட்டார்' என்று தெரிவித்துள்ளார்.

மேலும், தனது பெயரை வெளியிட வேண்டாம் என்றும் கோரியுள்ள அவர், அது மனதளவில், உடல்ரீதியாக நிச்சயம் ஆபத்து ஏற்படுத்தும் என்றும், தனிப்பட்ட முறையில் பாதிப்பு ஏற்படுத்தக் கூடும் என்றும் அச்சம் தெரிவித்துள்ளார்.

# ரஷ்யக்கொடியை ஏந்திய ஜோகோவிச்சின் தந்தை



அவுஸ்திரேலிய ஓபனில் நோவக் ஜோகோவிச்சின் தந்தை ரஷ்ய சார்புக் கொடிகளைக் காட்டி ரசிகர்களுடன் நின்றதால் உக்ரைன் கண்டனம் தெரிவித்துள்ளது. உ செர்பிய நட்சத்திரம் புதன்கிழமை இரவு ராட் லாவர் அரினாவில் ரஷ்ய எதிராளியான ஆண்ட்ரி ரூப்லெவை நேர் செட்களில் வீழ்த்தி போட்டியின் அரையிறுதியில் தனது இடத்தைப் பதிவு செய்தார்.

போட்டிக்குப் பிறகு ரஷ்யக் கொடிகளை ஸ்டேடியம் அருகே ஏந்திய ரசிகர்கள் குழு, அதில் விளாடிமிர் புடினின் முகம் அடங்கிய கொடியுடன் ரஷ்ய சார்பு கோஷங்களை எழுப்பியது. "தகாத கொடிகள் மற்றும் சின்னங்களை வெளிப்படுத்தி பாதுகாப்பு காவலர்களை அச்சுறுத்தியதால் நான்கு பேரை பொலிஸார் மெல்போர்ன் பூங்காவில் இருந்து வெளியேற்றினர்.

ரஷ்ய சார்பு அவுஸ்திரேலிய யூடியூப் கணக்கில் வெளியிடப்பட்ட ஒரு வீடியோ, ஜோகோவிச்சின் தந்தை ஸ்ரட்ஜான் புடின் கொடியை பிடித்த ஒரு நபருடன் போஸ் கொடுப்பதைக் காட்டியது."நோவக் ஜோகோவிச்சின் தந்தை துணிச்சலான அரசியல் அறிக்கையை வெளியிடுகிறார்" என்று தலைப்பிடப்பட்டிருந்தது.

செர்பிய டென்னிஸ் நிருபர்கள் அவர் ஜோகோவிச்சின் தந்தை என்பதை உறுதிப்படுத்தினர் மற்றும் மெல்போர்ன் ஏஜ் செய்தித்தாள் அவர் செர்பிய மொழியில் "ரஷ்யா வாழ்க." எனக் கூறினார் என்றது.

அவுஸ்திரேலியா மற்றும் நியூஸ்லாந்திற்கான உக்ரைனின் தூதர் வாசில் மைரோஷ்னிசென்கோ, கடந்த வாரம் கூட்டத்தினரிடையே காணப்பட்ட போது நடவடிக்கை எடுக்கக் கோரியதை அடுத்து, பார்வையாளர்கள் கிராண்ட்ஸ்லாமில் ரஷ்ய அல்லது பெலாரஷ்யக் கொடிகளை வைத்திருக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

சமீபத்திய சம்பவம் வெட்கக்கேடானது என்று வியாழக்கிழமை அவர் டுவிட்டரில் கூறினார்.

"இது ஒரு முழு தொகுப்பு. செர்பியக் கொடிகளில், ரஷ்யக் கொடி, புடின், இசட்-சின்னம், டொனெட்ஸ்க் மக்கள் குடியரசுக் கொடி என்று அழைக்கப்படும்" என்று வீடியோவின் இணைப்புடன் டுவிட் செய்துள்ளார்.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்கு ஆதரவுடன் தொடர்புடைய போர்க்கு ஆதரவான "ஹு" சின்னமான டி-ஷர்ட்டுடன் ஜோகோவிச்சின் போட்டியின் போது மற்றொரு நபரின் படத்தை AFP வெளியிட்டது.



இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 28.01.2023 அன்று வெளியிடப்பட்டது.